விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka




# வலம்புரி

பக்கங்கள்: பதினான்கு — Valampurii

சங்கு 10 வள்ளுவர் ஆண்டு 2040 ஆடி 20 புதன்கிழமை (05.08.2009) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 229

# நலன்புரி முகாமிலிருந்த 3000 பேர் இன்று சொந்த இடத்தில் குடியமர்வு

## பிரதேச செயலாளர்கள் பொறுப்பேற்பு

(யாழ்ப்பாணம்)

வன்னியில் இடம்பெற்ற மோதல் காரணமாக இடம்பெயர்ந்து யாழ்ப்பாணம் மற்றும் வவுனியா நலன்புரி முகாம்களிலுள்ள சுமார் ஆயிரம் குடும்பங்களைச் சேர்ந்த 3 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் இன்று அவர்களின் சொந்த இடங்களில் குடியமர்த் தப்படவுள்ளனர். அம்மக்களை சமூகசேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மற்றும் ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் பசில் ராஜபக்ஷ ஆகியோர் அரச அதிபர் மற்றும் பிரதேச செயலாளர்களிடம் கையளிக்க வுள்ளனர். (14ஆம் பக்கம் பார்க்க)




2009ஆம் ஆண்டுக்கான நல்லைக் குமரன் (17) மலர் வெளியீட்டுவிழா இன்று காலை 10 மணிக்கு யாழ்.நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறும்.

## 41 ஆயிரம் வாக்காளர் அட்டைகள் இதுவரை விநியோகிக்கப் படவில்லை

### யாழ். அரச அதிபர் தகவல்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகர சபை தேர்தலுக்கான 94 ஆயிரத்து 87 வாக்காளர் அட்டைகளில் 41 ஆயிரத்து 748 அட்டைகள் விநியோகிக்கப் படாமலுள்ளதாக யாழ்.அரச அதிபரும் யாழ். மாவட்ட தேர்தல் அத்தாட்சி அலுவலருமான க.கணேஷ் தெரிவித்தார்.

இதனால் வாக்க ாளர்கள் அட்டைகள் இல்லாதவர்களும் ஆள் அடையாளத்தை உறுதிப் படுத்தி வாக்களிக்க முடியுமெனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

யாழ். மாநகர சபைத் தேர்தல் தொடர்பாக விளக்கம் மளிக்கும் விசேட பத்திரிகையாளர் மாநாடு யாழ்.செயலகத்தில் யாழ்.தேர்தல் அத்தாட்சி அலுவலகர் க.கணேஷ் தலைமையில் நேற்று (13ஆம் பக்கம் பார்க்க)

## இந்திய அரசின் உதவியுடன் புனர்வாழ்வுத்திட்டம் ஆரம்பம்

(கொழும்பு)

போரால் பாதிக்கப்பட்ட இலங்கையின் வடக்கு - கிழக்கு பகுதிகளை மீளக் கட்டி எழுப்புவதற்கான திட்டம் இந்தியாவின் உதவியுடன் தொடங்கப்பட்டுள்ளது.

இது அப் பகுதி மக்களுக்குப் புனர்வாழ்வு அளிப்பதற்கும் நாட்டின் வேலை இல்லாப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கும் உதவும் இலங்கை என்று அரசு தெரிவித்துள்ளது.

இலங்கை-இந்திய அரசுகளுக்கு இடையில் கையெழுத்தான இரு தரப்பு ஒப்பந்தத்தின் அடிப்படையிலேயே ·இந்த மீளக்கட்டுமானத்திட்டம் தொடங்கப்பட்டுள்ளது.

இதற்கான (14ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வெற்றி தேர்தல் மூலம் உறுதிப்படுத்தப்படும்



### இரா.சம்பந்தன் நம்பிக்கை

(யாழ்ப்பாணம்)

தனித்துவமான ரீதியில் சுய நிர்ணய உரிமையின் அடிப்படையில் எமது மக்களுக்கு சகல அதிகாரங்களுடன் கூடிய முழுமையான சுயாட்சி வழங்கப்பட வேண்டும் என தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

நேற்று யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜாவின் கட்சி அலுவலகத்தில் இடம் பெற்ற பத்திரிகையாளர் மாநாட்டின் போது அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது;

வர லாற்று ரீதியாக நீடித்துக் செல்லும் இலங்கை இனப்பிரச்சினைக்கு தீர்வுத் (13ஆம் பக்கம் பார்க்க)

## கூட்டணி வேட்பாளர் ஈ.பி.டி.பிக்கு ஆதரவு!

(யாழ்ப்பாணம்)

தமிழர் விடுதலைக் கூட்டணியின் இளம் வேட்பாளரும் பல்கலைக்கழக மாணவனுமான ஜெயபாலன் ஜெசிந்தன் எதிர்வரும் யாழ். மாநகர சபைத் தேர்தலில் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சிக்கு தமது ஆதரவினைத் தெரிவித்துள்ளார் என ஈ.பி.டி.பி . தெரிவித்துள்ளது. (14ஆம் பக்கம் பார்க்க)

## மனிதாபிமான பிரச்சினைகள் இலங்கையில் நிலவவில்லை

### அமைச்சர் ஹெகலிய தகவல்

(கொழும்பு)

இலங்கையில் எவ்வித மனிதாபிமானப் பிரச்சினைகளும் நிலவவில்லை என பாதுகாப்பு பேச்சாளர் ஹெகலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

சில உலக நாடுகள் குற்றம் சுமத்துவதனைப் போன்று இலங்கையில் எவ்வித மனித உரிமை மீறல்களோ (14ஆம் பக்கம் பார்க்க)

## விரிவான எதிர்க்கட்சிக் கூட்டணி விரைவில் அமைக்க ஏற்பாடு

(கொழும்பு)

விரிவான எதிர்க்கட்சி கூட்டணியொன்றை அமைப்பது குறித்த உடன்படிக்கை இந்த மாதத்தில் கைச்சாத்திடப்படும் என தெரிவிக் கப்படுகிறது.

எதிர்க்கட்சிகளின் பொதுவான கூட்டணி குறித்த இணக்கப்பாடுகள் எட்டப்பட்டு இந்த மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னதாக ஒப்பந்தம் கைச்சாத்திடப்படும் என குறிப்பிடப்படுகிறது.

ஐக்கிய தேசியக் கட்சி, ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ், (14ஆம் பக்கம் பார்க்க)

## தொண்டர் ஆசிரியர்கள் அனைவருக்கும் நியமனம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் கடமையாற்றும் அனைத்து தொண்டர் ஆசிரியர்களுக்கும் ஆசிரிய உதவியாளர் நியமனம் வழங்கப்படுமென சமூக சேவைகள் அமைச்சர் டக்ளஸ்தேவானந்தா தெரிவித்தார்.

இது தொடர்பில் அமைச்சர் டக்ளஸ்தேவானந்தா மேலும் தெரிவிக்கையில்;

யாழ். வந்த (14ஆம் பக்கம் பார்க்க)

## சரியான தலைமைத்துவத்தை இனங்கண்டு தேர்தலில் மக்கள் வாக்களிப்பர்!

### அமைச்சர் டக்ளஸ் தெரிவிப்பு



(யாழ்ப்பாணம்)

எமது சமுதாயத்தை அதல பாதாளத்திற்குத் தள்ளிவிட துணை நின்றவர்களும் எதிர்ப்பு அரசியலை முன்வைத்து தொடர்ந்து சுயலாப நோக்கங்களை மட்டும் நிறைவேற்றிக் கொண்டவர்களும் இன்று யாழ்.மாநகர சபைத் தேர்தலுக்காக மட்டும் உங்கள் முன்வந்து புதிய அவதாரங்களை எடுக்க முற்படுகின்றனர் என ஈழமக்கள் ஜனநாய கக்கட்சியின் செயலாளர் நாயகமும் சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

நேற்று மாலை குருநகர் சென். ஜோன்ஸ் சன சமூக நிலைய ஏற்பாட்டில் (14ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# திருமலை எண்ணெய்க் குதங்களை இந்தியாவிடம் கையளிக்க முயற்சி

## ஜே.வி.பி. குற்றச்சாட்டு

(கொழும்பு)

திருகோணமலை மாவட்டத்தில் உள்ள சீனன்குடா எண்ணெய்க் குதங்களை இந்தியாவுக்கு குத்தகைக்கு கொடுப்பதற்கான இரகசிய முயற்சி ஒன்று மீண்டும் மேற்கொள்ளப்படுவதாகவும், இதற்கான உடன்படிக்கை ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளதாகவும் ஜே.வி.பி. குற்றம் சாட்டியிருக்கின்றது.

இந்த எண்ணெய்க் குதங்களை தமக்கு குத்தகைக்கு தருமாறு இலங்கை அரசுக்கு இந்தியா அழுத்தங்களை கொடுத்து வருவதாகவும் இது தொடர்பான குத்தகைக்கான நகல் உடன்படிக்கை ஒன்று தயாரிக்கப்பட்டு சட்டமா அதிர்திணைக்களத்தின் அனுமதிக்காக அனுப்பப் பட்டிருப்பதாகவும் ஜே.வி.பியின் இணையத் தளம் செய்தி வெளியிட்டிருக்கின்றது.

இது தொடர்பாக மேலும் அந்த இணையத் தளத்தில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது,

சீனன் குடாவில் உள்ள 100 எண்ணெய்க் குதங்களைக் கையளிப்பதற்கான முயற்சி ஒன்று மேற் கொள்ளப்படுகின்றது.

2002 ஆம் ஆண்டில் ஐக்கிய தேசியக் கட்சி அரசு இந்த எண்ணெய்க் குதங்களை இந்தியாவிடம் கையளிப்பதற்கான முயற்சிகளை மேற் கொண்ட போதிலும் தொழிற் சங்கங்களின் எதிர்ப்பு காரணமாக அந்த முயற்சியில் இருந்து அரசு பின்வாங்கியது.

இருந்த போதிலும் மற்றொரு உடன்படிக்கையின்படி அந்த எண்ணெய்க் குதங்கள் இந்தியாவுக்கு கையளிக்கப்பட்டன.

இந்த நிலையில் குறிப்பிட்ட குத்தகை உடன்படிக்கையில் கைச்சாத்திட வேண்டும் என இந்திய அரசு இப்போது இலங்கைக்கு அழுத்தம் கொடுத்து வருகின்றது.

மிகவும் நம்பகமான வட்டாரங்களில் இருந்து கிடைத்துள்ள தகவல்களின் படி இது தொடர்பான நகல் உடன்படிக்கை ஒன்று தயாரிக்கப் பட்டு சட்டமா அதிரிடம் இரகசியமாக அனுப்பி வைக்கப்பட்டிருக்கின்றது.

இந்த உடன்படிக்கைக்கு சட்டமா அதிபர் அனுமதி வழங்கினால் குறிப்பிட்ட 100 எண்ணெய்க் குதங்களும் இந்தியாவிடம் கையளிக்கப்படும்.

திருகோணமலையில் உள்ள பாரிய 101 எண்ணெய்க் குதங்களும் இரண்டாவது உலகப் போரின் போது பிரித்தானியாவால் அமைக்கப்பட்டவையாகும்.

இதற்கு பின்னர் அவை பயன்படுத்தப் படாத நிலையிலேயே இருக்கின்றன.

(ச-5)

## வன்முறைகளை அறிவிக்க தொலைபேசி இலக்கம்

தேர்தல் வன்முறைகள் குறித்து முறையிடுவதற்கு தொலைபேசி இலக்கங்கள் அரச அதிபர் க.கணேஷினால் அறிவிக்கப்பட்டுள்ளது.

இவ் இலக்கங்கள் மூலம் தேர்தல் தினத்தன்று தேர்தல் வன்முறைகள் குறித்து உடனடியாக முறையிட முடியும்.

தொலைபேசி இலக்கங்கள் வருமாறு,

| பெயர் | அலுவலகம் | சி.டி.எம்.ஏ | கைத்தொலைபேசி | வீடு |
|---|---|---|---|---|
| க.கணேஷ் (அரச அதிபர்) | 021 222 2235<br>021 222 2355 (Fax) | 060 221 1412 | 0773715708 | 0212222205 |
| ப.குணநாதன் (உதவி தேர்தல் ஆணையர்) | 0212222655<br>0212221070 (Fax) | 0602211620 | 077464912 | 0212228002 |
| தேர்தல் தொடர்பு அலுவலகம் 060 2735585 | | | | |

## தொழிற்கல்வி பயிற்சிக்கு விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

அரச கணிய அளவையியல் தொழிற்கல்வி பயிற்சிக்கு தகுதியான விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

20 வயதுக்கு மேற்பட்ட க.பொ.த.சாதாரண தரத்தில் சித்தியடைந்தவர்கள் விண்ணப்பிக்க முடியும்.

க.பொ.த. உயர்தரத்தில் 3 எஸ் சித்தி பெற்றவர்களுக்கு முன்னுரிமை வழங்கப் படும். விண்ணப்பதாரிகள் தமது சுயவிபரக் கோவையை, மாவட்ட இணைப்பாளர், இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபை, இல. 375 கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு மாவட்ட இணைப்பாளர் இரா.அகிலன் அறிவித்துள்ளார்.

(ச)

## தீர்த்தோற்சவம்

(வட்டுக்கோட்டை)

வட்டுக்கோட்டை கிழக்கு புரட்டிப்பனை முத்துமாரி அம்மன் ஆலய தீர்த்தத் திருவிழா இன்று காலை 9.30 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

(ச-14)

## ஆடிவேல் வீதியுலா

(யாழ்ப்பாணம்)

நல்லூர் ஸ்ரீ பாலகதிர்காம தேவஸ்தானத்தின் வருடாந்த ஆடிவேல் வீதியுலா நாளை வியாழக்கிழமை முதல் சனிக்கிழமை வரை யாழ். நகர் பவனிவந்து அனுஷ்டிக்கப்படவுள்ளது.

இதில் வரும் காணிக்கையை இடம் பெயர்ந்த, கஷ்டப்பட்ட மக்களுக்கு நன்கொடையாக வழங்கவுள்ளதாகவும் தேவஸ்தானத்தினர் தெரிவித்துள்ளனர்.

(ஓ)

# யாழ்ப்பாண பல்கலைக்கழக கலைப்பீடத்திற்கு 258 பேர் தெரிவு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்துக்கு 2008/2009 கல்வியாண்டு கலைப்பீடத்திற்கு 258 மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள். தெரிவு செய்யப்பட்ட மாணவர்களின் விபரம் வருமாறு,

எஸ். ஜெயசாலினி, ரி.தனுராஜன், எஸ்.நிரேஷா, ஆர்.ராஜமோகன், எஸ். மதியழகி, எஸ்.சுதர்சனா, ஜி.மனோரூபினி, கே. றஜீவன், எஸ். கஜேந்தன், எஸ். லோகநாதன், எம்.துவாரகை, ரி மகேந்திரா, வி.ஜனார்த்தனன், ஜே. சற்குநாதன், ஜி.காயத்திரி, எஸ்.யாழினி, பி.கிரிசாந்,

ஏ.றெல்வன், எஸ்.சாரூபன், ஏ.விஷ்ணு வர்த்தனி, பி.ராஜலிங்கம், எம். கஜன், எஸ்.சரண்யா, எஸ்.கௌதமி, எஸ்.கோபிகா, எஸ்.திவ்யசாந்தி, எஸ். நவேதா, ரி.கனகராஜா, எம்.ஜெயமலர், ஜே.கீர்த்தனன், ஏ.யோகினி, எஸ்.ஆர். வெர்ஜின், ஜி. மயூரப்பிரியா, வி.ஏ. தேவதாஸ், வி.இமயவல்லி, ஆர்.தருமராசா, ஆர்.பிர வீனா, கே. சுதர்சன், ஜி.கிறிஸ்டியு வராஜ், வி.லோக நாதன், வி.றதீனா, பி.கிருஷ்ணா, ரி.பிரதீபன்,

ஆர்.கலைவாணி, வி.வானதி, என். குணசேகரலிங்கம், எம்.திரிஷா, ஏ.விமல்ராஜ், என்.சிவநாதன், கே.சிவேந்திரன், எம்.கிஷோதனா, பி.நிரோஜன், ஏ.பிரியந்தினி, எம்.கோமதி, ஜெ.ஏ.பிரபாகரன், ஜி.வாகினி, எஸ்.செல்வ சுஜந்தன், எம்.தயாபரன், எச்.குகனேஸ்வரன்,

என்.பாலசுப்பிர மணியம், கே.சுப்பிரமணியம், கே.ஜெனி, கே.குக னேஸ்வரி, எம்.கணேசமூர்த்தி, எஸ். ஸ்ரீனிசாந், ஏ.சசிரேகா, எஸ்.பிரேமிளா, ஏ.வை. ஜெயதர்சினி, ஜெ.டில்றுக்சி, ரி.ஜீவிதா, எஸ்.சுமலதா,

ஏ. தனுசிகா, பி.ஜனனி, யூ.உமா, எஸ்.யாழினி, என். சுசீவன், ஏ.எம். சஜீனா, ரி.கமலநாதன், கே.பூம்பாவை. பி.சுரேகா, பி.சோமசுந்தரம், டபிள்யூ. பி.ஆர். ரஜந்தி, பி.காயத் திரி, எஸ். சஜீபா, எஸ். ராஜதுரை, ரி.சிவகுருநாதன், ஆர்.ஆர். பிரியன், ரி.துஷாந் திலதா, ரி.டயானா, எம்.பிரின்சிலா, எல். பெர்னாண்டோ, ரி.யுகாசினி, என். சிவச்சந்திரன், என்.நிஷாந்தினி,

ரி.பழனி நாதன், எஸ்.கோமேஸ், எம்.தர்மினி, பி.சிவகுமார், ஏ.நிலாணி, எஸ்.சதீபா, பி.யூடிட் பாமினி, பி. அயூரன், கே.பிரசன்னா, ஏ.அன்யூலிற், எஸ்.விஜய குமார், ஆர்.றஜீபரன், பி.மரிய தாஸ்,

எஸ்.சுமதி, ரி.தர்சனா, கே.மேகனா, கே.சௌந் தரராஜா, ஏ. சுதர்சினி, எஸ்.ஜனனி, பி.வினோதினி, வி. பிரதீபா, பி.சிங்கர், வி.டிலக்ஷ்சன், கே.டினுசன், ரி. துர்க்கா, கே.வனஜா, எஸ். அனுசா, வை. யோகாநந்தி, டி. ராசேந்திரம், எஸ். பிரிந்தா, எஸ்.சர்மிலன், ஆர். பிரேமிளா, எஸ்.தர்ம ராஜா, எம். கினித்தா, டி. பிருந்தா .(தொடரும்)

## சம்பத் வங்கியின் நேர்முகத் தேர்வுக்கு 21 பேர் கொழும்புக்கு அழைப்பு

(கொழும்பு)

கொழும்பு சம்பத் வங்கியினால் நடத்தப்பட்ட நேர்முகப் பரீட்சைகளில் தெரிவு செய்யப்பட்ட 21 பேருக்கான இறுதி நேர்முகப் பரீட்சை எதிர்வரும் 7 ஆம் திகதி முற்பகல் 9.00 மணிக்கு இல.110, சேர் ஜேம்ஸ் பீரிஸ் மாவத்தை கொழும்பு-02 எனும் முகவரியில் 5 வது மாடியில் அமைந்துள்ள மனித வளங்கள் திணைக்களத்தின் தலைமையகத்தில் நடைபெறவுள்ளதாக கொழும்பு சம்பத் வங்கியினால் அரச அதிபருக்கு நேற்று தொலை நகல் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது.

இவர்களுக்கான நேர்முகப் பரீட்சைக்கான அழைப்புக்கடிதம் அரசாங்க அதிபருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

உரியவர்கள் அதனை அரசாங்க அதிபர் அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம் எனவும் இவர்களுக்கான பாதுகாப்பு அனுமதிப் பத்திரத்தினைப் பெற்றுக் கொள்வதற்கான ஏற்பாடு அரசாங்க அதிபரினால் மேற் கொள்ளப்பட்டுள்ளது எனவும் தெரிவித்துக் கொள்வதுடன் இவர்களுக்கான பயண ஒழுங்குகள் அவர்களினாலேயே மேற் கொள்ளப்பட வேண்டும் எனவும் கேட்டுக்கொள்ளப் படுகின்றார்கள்.

அழைக்கப்பட்டவர்களின்விபரம் வருமாறு,

கே.பாலமுரளி (தும்பளை), ஆர். செந்தில் (இளவாலை), வி.சபேசன் (தும்பளை), எஸ்.பிரசாந் (தாவடி தெற்கு), எஸ்.ரூபகாந்தன் (கொக்குவில் கிழக்கு), கே. நிஷாந்தன் (அரியாலை), ஜே. அஜந்தன் (ஈச்சமோட்டை), எஸ்.தினேசன் (நல்லூர்), எஸ்.விருசன் (அரியாலை), கே. கஜரூபன் (அரியாலை),

வி.கோகுலன் (கோப்பாய் தெற்கு), பி.சிவலோகநாதன் (யாழ்ப்பாணம்), ரி.கவாஸ்கர் (கோண்டாவில் கிழக்கு), பி.டயன் (அரியாலை), செல்வி .கே.லோகசிவம் (நல்லூர்), செல்வி. லோக சிவம் (நல்லூர்), ஜே.அனோயா (ஆனைக் கோட்டை), செல்வி. ரி.குணரட்ணம் (அரியாலை), என். துஷ்யந்தன் (கோப்பாய்), செல்வி.ஏ.சத்தியசீலன் (கரவெட்டி), செல்வி என். பரமசாமி (சுன் னாகம்)

(ச)


## யாழ்-மாநகர சபைத் தேர்தல் 08-08-2009

மாநகர வாக்காளர்களே ! ஏன் இந்த மௌனம்? ஏன் தயக்கம்?

விழித்தெழு ! வீறுநடை போடு ! உரிமைக்கு கைகொடு.

இலங்கை தமிழரசு கட்சி சின்னத்தில் தமிழ் தேசிய கூட்டமைப்பு - T.N.A வேட்பாளர்.மக்கள் தொண்டன், சமூக ஆர்வலன், கொள்கைவாதி, மாநகர வளம் காண குரல் கொடுத்த சமாதான நீதவான்,சேவைக்காக வாக்கு வேண்டி வருகின்றேன். ஆதரவு நல்குங்கள். வெற்றிக்கனியைத் தாருங்கள் !

**வ.க.ஜெயபாலன் - J.P**

[கீரும் அண்ணா : சியாஸ் சித்தா - இராசா]



| | | |
|---|---|---|
| | | |
| 23 X | | |
| | | |

போடுங்கள் புள்ளடி ! வீட்டுக்கு நேரே

கீறுங்கள் புள்ளடி 23 இன் உள்ளே

பாதைகள் மாறுதாம் ! மனிதநேயம் பொங்கி வழியுதாம் !
பதவிகள்; பட்டங்கள் வேண்டுமாம் ! அற்ப சலுகை பெற
அரசுத்தார்மீக கடமைச் சேவையைப் பெற
நாம் பாதங்கள் தழுவி படுகுழியில் விழ வேண்டுமாம் !
ஆரவாரம், அட்டகாசம், வாக்குறுதிகள், அரசியல்
பம்மாத்துக்கள் ஏராளம் ஏராளம் ! ஆனால் தமிழர்கள்
அரசியல் தெரியாத ஏமாளிகளா? இங்கு வாழ
உரிமையற்ற அநாதைகளா?
சிந்தியுங்கள் ! வீட்டுக்கு வாக்களியுங்கள் !
என் எண் 23 ஐயும், சற்று கவனித்து புள்ளடி இடுங்கள்.
வெல்வோம் ! செல்வோம் ! நல்லாட்சி நமதே !

ஆதரவு நாடும்
வ.க.ஜெயபாலன்(T.N.A)

(3074)



## தவறிவிட்டது

கடந்த 03.08.2009 அன்று கொடிகாமத்திற்கும் யாழ். நகருக்குமிடையேயான பஸ் பிரயாணத்தின் போது வேலு தர்சினி என்பவரது தேசிய அடையாள அட்டை (847574160 V), விசேடஅடையாள அட்டை மற்றும் ஆவணங்கள் அடங்கிய பேர்ஸ் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்க் காணும் விலாசத்தில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும்.

மகராசி நகை மாளிகை
51, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
T.P :- 222 9931

(3079)



## விற்பனைக்கு

பலாலி வீதி, கந்தர் மடம் யாழ்ப்பாணத்தில் உள்ள 07 கடைகளும், வீடும் விற்பனைக்குண்டு.

தொடர்புகளுக்கு:-
021 222 5801

(3066)

## வடபகுதியின் ஏற்றமிக்க துரித அபிவிருத்திக்காய் தன்னை அர்ப்பணித்த தலைவர்



வடபகுதியின் ஏற்றம் மிக்க துரித அபிவிருத்திக்காக வடக்கில் வசந்தம்
180 நாள் விசேட தொழிற்பயிற்சி திட்டத்தின் கீழ் 12000
மாணவர்களுக்கு தொழிற்பயிற்சியும் , வேலைவாய்ப்பும், முகாம்களில்
உள்ள மக்கள் உடனடியாக வீடு திரும்பும் படிமுறை திட்டம்,
இளைஞர்களுக்கு புதுவாழ்வு என்பவற்றை ஏற்படுத்திக் கொடுக்கும்
கௌரவ பசில் ராஜபக்ச அவர்களுக்காக எம்மை அர்ப்பணித்துள்ளோம்

கலாநிதி ந.யோகராஜன் அதிபர்/ பணிப்பாளர்
விரிவுரையாளர் சங்கம் ,ஊழியர் சங்கம்
சிக்கன கடனுதவி கூட்டுறவுச்சங்கம்
தொழில்நுட்பக்கல்லூரி/ தொழில்நுட்பவியல் கல்லூரி
யாழ்ப்பாணம்.

(சி/2972)

## யாழ். நகர் வாக்காளர்களே !

செய்யக்கூடாத அனைத்தையும் செய்து விட்டு
செப்படி வித்தை காட்டுகின்றார்கள் !
சுய அறிவு கொண்ட நாமெல்லாம்
ஏமாந்து போக செம்மறிகளா?
வாக்குச் சீட்டில் பதிலடி கொடுங்கள்!
வீட்டுச் சின்னத்துக்கு
வாக்களியுங்கள் !!
10 ஆம் இலக்கத்தையும்
பார்த்துக் கொள்ளுங்கள் !!



### கே. என்.கனகரத்தினம் (விந்தன்)

(முன்னாள் பிரதேச சபை உறுப்பினர், சமாதான நீதவான்)

X | 10 X | X | X


(3048)

# யாழ் மாநகர சபைத் தேர்தல்

## 08.08.2009

## இலங்கை தமிழரசுக் கட்சி (தமிழ் தேசியக் கூட்டமைப்பு)

முதலில் வீட்டுச்சின்னத்திற்கு
புள்ளடியிடுங்கள் X
பின்பு
வேட்பாளர் இலக்கத்திற்கும் மேலும்
பக்கத்திலுள்ள இரண்டு கூட்டினுள்ளும்
புள்ளடியிடுங்கள் 17 X | X | X



### நடராஜா இராஜதேவன் இல 17

யாழ். நகர மக்கள்

(3067)

# 45 ஆம் நாள் நினைவஞ்சலி

## அமரர் மகேந்திரன் சசீந்திரன்

அன்னை மடியில்
13 - 10 - 1984

ஆண்டவன் அடியில்
22 - 06 - 2009



முயல் தொடுத்த போரிலே
வேங்கை வீழுமோ – இது
மூர்க்கர்களின் கூட்டுறவால்
அன்று நேர்ந்ததோ
உயிர் கொடுத்து உயிர்காக்க
உத்தமனொருவன் – அங்கே
எழுந்ததினால் எமது நெஞ்சில்
இடி விழுந்ததே
புயல் போன்று பலத்துடன்
எம்முடன் நடந்தாய் – இன்று
புல்லர்களின் பாதகத்தால்
வாழ்வை நீ இழந்தாய் – உங்கள்
செயல்தடுக்க எவருமில்லை
எனக் கொடியோரே – நீங்கள்
சிரிக்காதீர்கள் தெய்வம் தீர்ப்பு
நாளை கூறும்.

இல.31, கே.கே.எஸ். வீதி,
கொக்குவில்.

-குடும்பத்தினர்

(3078)

# வணங்காமண் நிவாரணப் பொருட்களை இவ்வாரத்திற்குள் இறக்குவதற்கு ஏற்பாடு

## இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் தெரிவிப்பு

(கொழும்பு)

யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக ஐரோப்பிய நாடுகளில் வாழும் தமிழர்களால் வணங்காமண் கப்பலின் ஊடாக அனுப்பப்பட்ட நிவாரணப் பொருட்களை இவ்வாரத்திற்குள் இறக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் அறிவித்துள்ளது.

பொருட்களை இறக்கி அதனை விநியோகிப்பதற்கு கொழும்புத் துறைமுகம் இணக்கம் தெரிவித்திருப்பதாகவும் இவ்வாரத்திற்குள் பொருட்களை இறக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் பிரதிப் பணிப்பாளர் நாயகம் சுரேன் பீரிஸ் தெரிவித்தார். (ஓ-6)

# வவுனியா நலன்புரி நிலைய மக்களை கணக்கெடுப்பதற்கு விசேட பொலிஸ் பதிவு

## பிரதி பொலிஸ் மா அதிபர் நிமால் லெவகே தெரிவிப்பு

(கொழும்பு)

வவுனியா தற்காலிக நலன்புரி முகாம்களில் தங்கியுள்ள அனைத்துப் பொதுமக்களையும் கணக்கெடுப்பதற்கான பொலிஸ் பதிவொன்றை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று வட மாகாணத்திற்குப் பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் நிமால் லெவகே தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் பொலிஸ் மா அதிபர் மேலும் தெரிவிக்கையில்,

நலன்புரி முகாம்களில் தங்கியிருக்கும் பொது மக்களில் பலர் அங்கிருந்து இரகசியமான முறையில் தப்பிச் சென்றுள்ளனர் என்று பல்வேறு குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. இருப்பினும் இந்தக் குற்றச்சாட்டுக்கள் எவையும் ஏற்றுக் கொள்ள முடியாதவையாகும்.

இடைத்தங்கல் முகாம்களிலிருந்து சுமார் 5 ஆயிரம் பேர் வெளியேற்றப்பட்டுள்ளதாக அரசியல் வாதிகள் உள்ளிட்ட பல தரப்பினர் குற்றம் சுமத்தியுள்ளனர். இந்தக் குற்றச்சாட்டுக்கு தீர்வு காணும் பொருட்டே பொலிஸார், இராணுவத்தினர் மற்றும் விசேட அதிரடிப்படையினரின் உதவியுடன் கணக்கெடுப்பு நடத்தப்படவுள்ளது.

இந்த கணக்கெடுப்பு நடவடிக்கையானது வவுனியா மாவட்ட செயலாளரின் ஒத்துழைப்புடன் பொலிஸாரால் மேற்கொள்ளப்படவுள்ளது.

இந்த கணக்கெடுப்பின் மூலம் உண்மையில் இடம்பெயர்ந்த மக்கள் சட்ட விரோதமான முறையில் வெளியேற்றப்பட்டுள்ளனரா? என்பது குறித்து கண்டறிய முடியும். ஒரு இலட்சம் முதல் ஒரு மில்லியன் வரையில் பணம் கொடுத்து அகதி முகாம்களிலிருந்து மக்கள் வெளியேறி வருவதாக அரசியல் வாதிகள் சிலர் ஜனாதிபதியிடம் முறையிட்டுள்ளனர்.

எவ்வாறெனினும், பெரியளவு தொகையான மக்கள் அகதி முகாமிலிருந்து வெளியேறியிருக்க வாய்ப்பு இல்லை. காரணம் பிரதேசத்தின் பாதுகாப்பு உச்சளவு உறுதிப்படுத்தப்பட்டுள்ள நிலையில் அவர்கள் இவ்வாறு வெளியேறியிருக்க முடியாது.

இதேவேளை வவுனியாவில் அமைக்கப்பட்டுள்ள ஏழு நலன்புரி முகாம்களில் 60 பொலிஸ் அலுவலகங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

இவற்றில் மகளிர் மற்றும் சிறுவர் பொலிஸ் சேவைப் பிரிவுகளையும் உள்ளடக்குமாறு பொலிஸ்மா அதிபர் வழங்கிய உத்தரவுக்கமைய தற்போது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றார். (ஓ-4)

# இலங்கையில் மனித நேய பிரச்சினை எதுவும் இல்லை

## தென்னாபிரிக்க அமைச்சரிடம் கெஹெலிய தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையில் மனிதநேய பிரச்சினைகள் நிலவுவதாக சில நாடுகளும் மனித உரிமை கண்காணிப்பகங்களும் கூறிவருவதை இலங்கை அரசாங்கம் மறுத்துள்ளது. தென்னாபிரிக்காவின் சர்வதேச உறவுகள் மற்றும் ஒத்துழைப்புக்கான பிரதி அமைச்சர் இஸ்மாயில் இப்ராஹிம், இலங்கையில் மனித உரிமைகள் பிரச்சினைகள் நிலவுவதாகவும் அவற்றுக்குத் தீர்வுகாண உதவ தமது அரசாங்கம் தயாராக இருக்கின்றது என்றும் தெரிவித்தமைக்கு பதிலளித்த பாதுகாப்பு விவகாரங்களுக்கான பேச்சாளர் அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல, இங்கு அத்தகைய பிரச்சினைகள் எதுவும் நிலவவில்லை என்று கூறினார்.

அமைச்சர் தொடர்ந்து கூறுகையில்,

ஆரம்பத்தில் சுமார் மூன்று இலட்சம் பேர் ஒரு சில நாட்களில் அகதிகளானதும் சில பிரச்சினைகள் எழுந்த போதிலும் தற்போது அரசாங்கம் அவற்றுக்கு தீர்வு கண்டு உலக நாடுகளுக்கே ஒரு எடுத்துக்காட்டாக விளங்குகிறது.

சுமூக நிலையை ஏற்படுத்தும் நடவடிக்கைகள் தடையின்றி நடைபெற்று வருகின்றன. இதில் நாளுக்கு நாள் முன்னேற்றம் காணப்படுகின்றது. இலங்கை நிலைமையை கையாளும் விதத்தை பார்வையிட்ட பல சர்வதேச அமைப்புக்கள் இலங்கையை பாராட்டியுள்ளன என்று தெரிவித்தார். (ஓ-4)

# சட்டவிரோத ஆயுதம் வைத்திருப்போர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்

(கொழும்பு)


சட்ட விரோத ஆயுதங்களை எவரும் கொண்டு செல்ல முடியாது. அவ்வாறு சட்ட விரோத ஆயுதங்களை வைத்திருப்பது கண்டு பிடிக்கப்பட்டால் அவர்கள் மீது மிகக் கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமென மட்டக்களப்பு மாவட்டத்துக்குப் பொறுப்பான பிரதிப் பொலிஸ்மா அதிபர் எடிசன் குணதிலக தெரிவித்தார்.

கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற மட்டக்களப்பு வர்த்தகர்களுடனான சந்திப்பில் உரையாற்றும் போதே பிரதிப் பொலிஸ்மா அதிபர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இங்கு தொடர்ந்து உரையாற்றிய பிரதிப் பொலிஸ்மா அதிபர் சிறிய ஆயுதக் குழுக்கள் என்றாலும் சரி தனி நபர் என்றாலும் சரிசட்ட விரோத ஆயுதங்களை வைத்திருந்தால் அல்லது சட்ட விரோத ஆயுதங்களுடன் நடமாடினால் மிகக் கடுமையான சட்ட நடவடிக்கை அவர்கள் மீது எடுக்கப்படும்.

இதை மீறி அவர்கள் சட்ட விரோத ஆயுதங்கள் வைத்துக்கொண்டு நடமாடினால் தேவையேற்படின் துப்பாக்கிச் சூடும் நடத்தப்படும் என்று தெரிவித்தார். (ஓ-4)

# நல்லூரான் திருவடிக்கு இன்று 10ஆம் திருவிழா



## மஞ்சம் ஏறிவா தயாபரா

நெஞ்சக் குறைதீர்க்க மஞ்சம் ஏறிவா முருகா
பஞ்சப் பிணிபோக்க மஞ்சம் ஏறிவா அழகா
அஞ்சா வாழ்வுதர மஞ்சம் ஏறிவா குமரா
கொஞ்சும் குழந்தையாய் மஞ்சம் ஏறிவா வேலா

வேலனடியாள்

## தங்கவொளி வீசிநிற்கும் மஞ்சம்

தங்கவொளி வீசிநிற்கும் மஞ்சமதன் மேலே
எங்கள் மனம் கொள்ளை கொள்ளும் வேலவனைக் கண்டே
பண்ணுடனே திருமந்திரம் பாடியேபின் வருவார்
கண்நிறைந்த காட்சிகண்டு அகமகிழ்ந்து நிற்போம்

பண்ணிசைமணி ச. சிவப்பிரகாசம்.

## தஞ்சமே தந்தெமை தாங்கிடு வேலப்பா

நஞ்சு நிறை மாந்தர் வஞ்சனையால் நாங்கள்
அஞ்சி அஞ்சி யுன்னைக் கெஞ்சுகின்றோமையா
குஞ்சரிகளோடு மஞ்சத்திலே வந்து
தஞ்சமே தந்தெமை தாங்கிடு வேலப்பா

கவிமணி அன்னைதாஸன்
உரும்பிராய்

## மஞ்சத்தில் எழுந்தருளும் மன்னவனே!

மஞ்சத்தில் எழுந்தருளும் மன்னவனே - நல்லூரா
மாநிலம் செழிக்க நீ அழகுற வருவாயே

மடந்தையர் அருகினில் தனியழகே - உன்னை
மகிழ்விக்க பக்தர் கோடி உன் அருகே (முருகா)

மஞ்சத்தில் உன் உருவம் ஜொலிக்கின்றதே - எம்மை
மயக்க நீ பூண்ட கோலம் அழைக்கின்றதே
மங்கலம் பொங்க வரும் உன்னழகை - கண்ட
மாந்தர்தம் உள்ளங்கள் நிறைகின்றதே (முருகா)

மலர் சின்னையா
(செம்பியின் செல்வி)

## முருகையனே மஞ்சத்தினிலே எழுந்தருள்வாயே

இருட்டறை மூலையில் துயிலும் குமரனே
ஈர்க்கும் சக்தி கொண்ட முருகா நீயே
மயக்குறு மாயையை நீக்கி எம்முன்னே
மலர்ந்திடும் சோதியே சோதியைத் துலக்கி
பொருப்புடை மயிலுடன் நீயும் -எம்
புந்தியில் வந்து நெருங்கி அருளிடும்
நல்லையில் நல்லை முருகையனே
ஆரணனே திருக்குமரா திருமஞ்சத்தில்
எழுந்தருள்வாயே!

G. மகிந்தன்
நயினை




மஞ்சத்தில் பவனி வரும் மயில் வாகனா!
மக்கள் மனக்குறை தீர்த்தருள்வாய் நீயே!

ஆசைப்பிள்ளை அன் சன்
நகைமாடம்

இல.10, பஸ் நிலையம்,
சங்கானை.

யாழ்ப்பாணம் மாநகரசபைக்கான தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பில் இணைந்து ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியாகிய நாம் போட்டியிடுகின்றோம். இத்தேர்தலானது எதிர்காலத்தில் நடைபெறவிருக்கும் வடக்கின் மாகாணசபை, பாராளுமன்றம் மற்றும் ஜனாதிபதித் தேர்தல் ஆகியவற்றிற்கான முன்னோடித் தேர்தலாக பார்க்கப்படுகிறது.

இத்தேர்தலில் தமிழ் மக்கள் வெளிப்படுத்தவிருக்கும் ஜனநாயகத் தீர்மானங்களே மூன்று தசாப்தங்களுக்கு மேலாக யுத்தத்திற்கு முகங்கொடுத்து உயிரழிவுகளையும், சொத்தழிவுகளையும், உடைமை இழப்புக்களையும் அனுபவித்த வாழ்விலிருந்து எமது மக்கள் மீண்டுவருவதற்கும், மீண்டும் எமது சொந்த மண்ணில் முகமுயர்த்தி வாழ்வதற்கும் அவசியமாகிறது. சிதைக்கப்பட்ட எமது இனத்தின் வாழ்வையும் அழிக்கப்பட்ட எமது வாழ்விடங்களையும் மீண்டும் கட்டியெழுப்புவதையும் தமிழ் மக்களுக்கு கௌரவமான அரசியல் தீர்வொன்றையும் பெற்றுக்கொடுக்கும் கடமையை ஈ.பி.டி.பி.யினராகிய நாம் ஏற்றுக்கொண்டுள்ளோம். அதைச் செய்து முடிக்க மக்களாகிய உங்களது ஏகோபித்த ஆதரவை வேண்டி நிற்கின்றோம்.

யாழ்ப்பாணம் மாநகரசபை நிர்வாகத்தை நாம் பொறுப்பெடுத்துக்கொள்ளும் போது செய்து முடிக்க வேண்டிய பணிகள் ஏராளமானவை என்பதை நாம் அறிவோம். அவற்றில் நாம் அடையாளம் கண்டிருக்கும் முதன்மைப் பணிகளையே இங்கு பட்டியலிடுகின்றோம்.

**01. யாழ்ப்பாணம் மாநகரசபைக்கு புதிய கட்டடம் அமைத்தல்.**

- எமது கலாசாரம், பண்பாட்டை உள்ளடக்கியவாறு புதுப்பொலிவுடன் நவீனமயப்படுத்தப்பட்ட வகையில் பழைய இடத்தில் புதிய கட்டடம் அமைத்தல்.
- உள்ளக வருமானத்தை அதிகரிக்கச் செய்வதற்கான வழிவகைகளை ஏற்படுத்துதல்.
- மாநகரின் சுத்தம், சுகாதாரம் என்பவற்றுடன் அழகு படுத்துவதற்கும் கூடுதல் நிதி ஒதுக்கீடு செய்தல்.
- இலங்கையில் முன்மாதிரி மாநகரசபையாக அனைத்துச் செயற்பாடுகளையும் வடிவமைத்தல்.
- யாழ் மாநகரசபைக்குட்பட்ட பகுதியில் இடிபாடுகளுடன் காணப்படும் கட்டடங்களை புனரமைப்பு செய்து மக்களின் பாவனைக்கு ஏற்றவகையில் மாற்றுதல்.
- மாநகர எல்லைக்குட்பட்டு வாழ்ந்த மக்களில் இதுவரை குடியேறாதவர்களை மீண்டும் மீளக்குடியமர்த்துவோம்.
- கடந்த காலத்தில் மாநகர எல்லைக்குள் அமையப்பெற்றிருந்த பயிற்சிக் கல்லூரி, நிறுவனங்கள் ஆகியவற்றை மீண்டும் மாநகர எல்லைக்குள் கொண்டு வருதல்.

**02. குளங்கள் புனரமைப்புச் செய்தல்.**

- மாநகரசபை எல்லைக்குள் காணப்படுகின்ற அனைத்துவகைக் குளங்களையும் சுத்தப்படுத்துவதோடு புனரமைப்புச் செய்தல்.
- குளங்கள் மாசடைவதை தடுப்பதற்கான நடவடிக்கைகளை எடுத்தல்.
- பொழுதுபோக்கு அம்சங்களை குளங்களின் அளவுக்கும் சுற்றாடலுக்கும் ஏற்றவகையில் ஏற்படுத்துதல்.

**03. வடிகான்கள் புனரமைப்புச் செய்யப்படுதல்.**

- பெரிய, நடுத்தர, சிறிய வடிகான்களை அவற்றிற்கேற்றவகையில் இனங்கண்டு புனரமைப்புச் செய்தல்.
- எந்த வகையிலும் தண்ணீர் தேங்கி நிற்காதவாறு சூழலைப் பாதுகாத்தல்.
- கழிவுநீரை அகற்றும் வகையில் தேவையான இடங்களை அடையாளம் கண்டு புதிய வடிகான்களை அமைத்தல்.
- நுளம்பு மற்றும் இலையான்கள் போன்ற நோய்க் காவிகள் உருவாகாத வகையில் யாழ் மாநகரசபையின் சுகாதாரப் பிரிவை மேம்படுத்துதல்.

**04. நிலத்தடி நீரைப் பாதுகாத்தல்.**

- யாழ்ப்பாணத்தில் நிலத்தடி நீர் மாசடைந்து வருவதனால் அதைப் பாதுகாக்கின்ற வகையில் மலசலகூட வடிகாலமைப்பை ஏற்படுத்துதல்.
- குடிதண்ணீர் வசதி சகல மக்களுக்கும் கிடைக்கின்ற வகையில் நீர்வழங்கலை 24 மணிநேரமும் கிடைக்க வழிவகை செய்தல், விநியோகித்தல்.
- தேவையான பகுதிகளில் குழாய்நீர் வசதிகளை ஏற்படுத்துதல்.

**05. வீதிகள் புனரமைப்பு**

- யாழ் மாநகர அனைத்து வீதிகளையும் அகலமாக்கி புனரமைப்புச் செய்தல்.
- பிரதான வீதிகளுடன் இணையும் உள்வீதிகளையும் புனரமைப்புச் செய்தல். அவற்றைப் போக்குவரத்துக்கு ஏற்ற வீதிகளாக மாற்றுவதற்கு தார் ஊற்றுவது, சீமெந்துச் சாலைகளை அமைத்தல்.
- புதிய வீதிகள் அமைத்தல், சிறிய வீதிகளை வரையறை செய்தல்.
- வீதிகளில் விபத்துக்களை தடுக்கும் வகையிலான அடையாளங்களை நிறுவுதல்.
- யுத்தகாலத்தில் வீதிகளுக்கு குறுக்காக அமைக்கப்பட்ட தடைகளை அல்லது தடுப்புக்களை அகற்றுவதற்கு உரிய நடவடிக்கை எடுத்தல்.

**06. பொழுதுபோக்கு அம்சங்களை அமைத்தல்.**

- மாநகரசபை பிரதேசத்திற்குள் மக்களின் தொகைக்கேற்ப ஒவ்வொரு பகுதிகளிலும் சிறுவர் பூங்காக்களை அமைத்தல்.
- சுப்பிரமணியம் பூங்காவை மேலும் மெருகூட்டி, அழகுபடுத்துதல்.
- உடற்பயிற்சிக்கு ஏற்றவகையிலும், சிறுவர்களுக்கு அனைத்து விளையாட்டு அம்சங்களும் உள்ளடங்கும் வகையிலும் பூங்காக்களை அமைத்தல்.
- துரையப்பா விளையாட்டு அரங்கத்தை விளையாட்டுத்துறை சார்ந்த சகல விளையாட்டுகளையும் நடத்தக்கூடிய வகையில் நவீனமுறையில் புனரமைப்புச் செய்வதும், அதன் சுற்றாடலை அழகுபடுத்தலும்.
- யாழ்ப்பாணம் பொது நூலகத்திற்கு அருகில் அமைந்துள்ள திறந்தவெளி அரங்கு நவீனமுறையில் புனரமைப்புச் செய்யப்படுதல்.
- பிரதான சின்னமான யாழ் கோட்டைப் பகுதியின் உட்புறமும் வெளிப்புறமும் சுத்தப்படுத்தப்பட்டு புனரமைப்புச் செய்தலும், அழகுபடுத்துதல், கோட்டையின் முற்றவெளிப் பகுதியில் நிழல்மரங்கள் நடுதல், ஓய்வு நாற்காலிகள் அமைத்தல், கோட்டையைச் சுற்றியுள்ள அகழியை சுத்தப்படுத்துவதோடு அழகுபடுத்தி உல்லாசப் பயணிகளை ஈர்க்கும் இடமாக மாற்றுதல்.
- உல்லாசப் பயணிகளைத் திருப்திப்படுத்தும் வகையில் யாழ் மாநகரசபையின் கடற்கரையோரங்களை அழகுபடுத்துதல், நிழற்குடைகள் மற்றும் இருக்கைகள் அமைத்தல்.

**07. சந்தைத் தொகுதிகளை சீராகப் பராமரித்தல்.**

- யாழ் மாநகரின் மத்தியில் அமைந்துள்ள மரக்கறிச் சந்தைப் பகுதியில் மாடிச் சந்தைக் கட்டடங்களை அமைத்தல்.
- அப்பகுதியின் கீழ்த்தளத்தை வாகனத் தரிப்பிடமாகப் பராமரித்தல்.
- புதிய கடைகள் மற்றும் பொது வாகனத் தரிப்பிட வசதிகளை ஏற்படுத்துதல்.
- அனைத்துத் தேவைகளையும் பூர்த்தி செய்கின்ற வகையிலான நவீன பல்பொருள் அங்காடிகளை அமைத்தல்.
- பொது மலசலகூடத்தை போதுமான வசதிகளுடன் அமைத்தல்.

**08. பஸ்தரிப்பு நிலையத்தை நவீன வசதிகளுடன் மெருகூட்டுதல்.**

- பஸ் தரிப்பு நிலையம் தற்போதைய நிலையிலிருந்து புனரமைப்புச் செய்யப்பட்டு விஸ்தரிக்கப்படுதல்.
- வாகன வகைக்கேற்ப தரிப்பு நிலையங்களை பயணிகளுக்கு ஏற்ற வகையில் அமைத்தல்.
- தூர இடங்களிலிருந்து வரும் பயணிகளின் வசதிக்கு ஏற்ற வகையில் மலசலகூடம், கடைத்தொகுதிகள் என்பவற்றை ஏற்படுத்துதல்.
- தொலைக்காட்சிப்பெட்டி பொருத்துதல். தெளிவான அறிவிப்புகளுக்கு ஏற்ற வகையில் ஒலிபெருக்கி வசதிகளை ஏற்படுத்துதல்.
- மாநகரத்திற்குள் தேவையான இடங்களில் புதிய பஸ்தரிப்பு நிலையங்களை அமைத்தல்.

**09. பொது வசதிகள்**

- தெரு விளக்குகளை நவீனப்படுத்துதல், சீராக அமைத்தல், புதியவற்றை நிர்மானித்தல்.
- வீதியின் இரு புறங்களிலும் மக்கள் நடந்து செல்வதற்கான நடைபாதையினை அமைத்து அழகுபடுத்துதல், செப்பனிடுதல்.
- பொதுமக்களுக்கு பயனளிக்கும் வகையில் பொது இடங்களில் நீர்த்தாங்கிகளை அமைத்தல். மலசலகூட வசதியை ஏற்படுத்தி பராமரித்தல்.

# யாழ்ப்ப
# மாநகரசபைத
# ஆகஸ்

## தேர்தல் விஞ்ஞா



### அரசியல் தீர்வுக்கா

- இலங்கை இந்திய ஒப்பந்தத்தின் அடிப்படையில் 13 நடைமுறைப்படுத்தப்படுவதை வரவேற்று அதற்காக ப
- ஐக்கிய இலங்கைக்குள் அனைத்து மக்களுக்குமான சமவுரிமைக்கான வாழ்வுக்கு தொடர்ந்து நடைமுறைச் மேற்கொள்ளல்.
- நாம் தோற்றுப்போன இனத்தவர் அல்ல என்ற உறுதி விட்டுக்கொடுக்காத வகையில் அனைத்து மக்களோடு

## ஈழ மக்கள் ஜனநாயகக்

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்ட

(சி/2610)

# ஏமாந்தது போதும் விழித்தெழுங்கள்



**வாக்காளர் பெருமக்களே !**

1. ஜனநாயகம் வேண்டுமா? சர்வாதிகாரம் வேண்டுமா ? முடிபு யார் கையில் ?
2. அரசு ஆசிர்வாதம் பெற்ற சர்வாதிகாரம் எம்மை அடிமையாக்கி விடும் –?
3. 30 ஆண்டுகள் நம் மக்கள் பட்டதுன்பம் போதாதா ?
4. தொடர்ந்து நடைபெறும் வெள்ளைவான் கடத்தல் ,கப்பம் கோரல், கொள்ளை ஆகியபற்றி அரசு அறியாதா?
5. வர்த்தகர்களுக்கு கப்பம் அறவிடுவோர் கொடுக்கும் தொல்லை பற்றி அரசு அறியாதா?
6. கிழக்கு மாகாணத்தைப் போல இங்கும் ஆயுதங்கள்களையப்பட்டால் வன்முறை களை கட்டுப்படுத்தலாம் என அரசு அறியாதா?
7. பல தடவைகள் வற்புறுத்தியும் ஆயுதம் களையாமையால் இந் நிலைதொடர அரசு விரும்புகிறதா? அப்படியானால் ஆண்டவன் தான் நம் மக்களைக் காப்பாற்ற வேண்டும்.
8. எம்மக்கள் பல்லாயிரக்கணக்கில் கொல்லப்பட்டபோது உலகை சுற்றி வந்தவர்களுக்கா உங்களது வாக்கு?
9. போரின் இறுதிக் கட்டத்தில் ஒருசில பாராளுமன்ற உறுப்பினரேனும் நாட்டில் தங்கிநடந்த அனர்த்தங்கள் பற்றி உலகறிய செய்திருக்கலாம் . அதற்குபாராளுமன்றம் பயன்படுத்தியிருக்கலாம்.
10. கடந்த தேர்தலில் எனக்கு ஒரு பாராளுமன்ற ஆசன மேனும் தந்திருந்தால் இவர்கள் சாதித்ததை விட பல நூறு மடங்கு சாதித்திருப்பேன்.
11. களங்க மற்ற சுய நலமற்ற மக்கள் பிரச்சினைகளே நிரந்தர தீர்வு நோக்கி அணுக வேண்டுமானால் பல்லின மக்களின் நன்மதிப்பை பெற்றுள்ள தமிழர் விடுதலை கூட்டணிக்கே உங்கள் வாக்கை அளியுங்கள்.
12. 5 ஆண்டுகளுக்கு மேல் தமிழ் பாராளுமன்ற பிரதிநிதிகள் சாதித்த ஒரு விடயத்தையேனும் கூற முடியுமா?

(3077)

## தமிழர் விடுதலைக் கூட்டணி ✕

## வீ. ஆனந்தசங்கரி 1

# யாழ். மாநகர வாக்காள பெருமக்களின் கவனத்திற்கு !

அன்புடையீர் !



## போராட்டம் இருவகைப்பட்டது வன்முறை- சாத்வீகம்

வன்முறையால் எமது கலை,கலாசாரம் ,பண்பாடு போன்ற அத்தனையும் அழிந்து இனமும் அழிந்துகொண்டு போகிறது. சாத்வீகம் கூட கோழைகளுக்கல்ல அதற்கும் வீரம் வேண்டும். துணிச்சல் மிக்க தன் எழுத்து வன்மையால் பாரபட்சமின்றி அரசையும் விடுதலைப்புலிகளையும் காலத்திற்கு காலம் தேவை ஏற்படும் போதெல்லாம் அவரவர் குற்றம் குறைகளையும் சுட்டிக்காட்டி விமர்சித்து வந்த ஒரே ஒரு தலைவர் திரு.வீரசிங்கம் ஆனந்தசங்கரி அவர்கள் மட்டுமே. அவரின் எழுத்துக்களை அடையாளம் கண்டு ஐக்கிய நாடுகள் சபையின் உப -ஸ்தாபனமான யுனெஸ்கோ சகிப்புத்தன்மைக்கும் அகிம்சைக்கும் உரிய 'மதன் ஜித் சிங் 'விருது வழங்கி கௌரவித்தது. தலைவர் அவர்கள் ஜனாதிபதிக்கும் விடுதலைப் புலிகளின் தலைவர் திரு.வே. பிரபாகரனுக்கும் எழுதிய கடிதங்களின் திகதிகளும், தலைப்புக்களும் கீழே தரப்பட்டுள்ளன.

**ஜனாதிபதிக்கு எழுதப்பட்ட கடிதங்களும் அவற்றின் திகதிகளும்**

1) 09.02.2009- உள்ளூர் இடம்பெயர்ந்தோர் சார்பாக வேண்டுகோள்
2) 16.02.2009- வன்னி வாழ் மக்களின் உயிருக்கு அச்சுறுத்தல்
3) 05.03.2009- பெருந்துயரில் வன்னி மக்கள்
4) 09.03.2009- மிக்க அவதானத்துடன் செயற்படவேண்டிய அவசியம்
5) 30.03.2009- உணர்வைத் தூண்டும் விடயங்களில் அரசு பாராமுகமாக இருக்க முடியாது
6) 10,.04.2009- பதற்றத்துடன் வாழும் இடம்பெயர்ந்த மக்களைக் காப்பாற்றுங்கள்
7) 01.05.2009- வன்னியில் எஞ்சியுள்ள இடம்பெயர்ந்தோரைக் காப்பாற்றுங்கள்
8) 02.05.2009- ''எம் உயிரைக் காப்பாற்றுங்கள்'' என வன்னியில் இருந்து இடம்பெயர்ந்தோர் குரல்
9) 11.05.2009- பாதுகாப்பு வலயத்திற்குள் நடப்பவை உலகை அதிர வைக்கும்
10) 11.05.2009- யுத்த சூனியப்பிரதேசத்தில் ஏற்பட்டுள்ள உணவு நெருக்கடி (அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர்)
11) 12.05.2009- முள்ளிவாய்க்கால் அரச வைத்தியசாலையில் ஏற்பட்ட அனர்த்தம்
12) 14.05.2009- என்ன விலை கொடுத்தேனும் முள்ளி வாய்க்கால் மக்களை காப்பாற்ற வேண்டும்
13) 15.05.2009- இடம்பெயர்ந்து முள்ளிவாய்க்காலில் அவதியுறும் மக்களின் சார்பில் விடப்படும் அபயக்குரல் (கண்டன அறிக்கை)
14) 17.05.2009- முள்ளிவாய்க்காலுக்கு உணவும், மருந்தும் விரைந்து அனுப்புங்கள்
15) 19.05.2009- முள்ளிவாய்க்காலில் உணவு, மருந்து நெருக்கடி
16) 24.05.2009- கர்ப்பிணித் தாய்மார்களினதும் குழந்தை பெற்ற தாய்மார்களினதும் பரிதாபநிலை (மேஜர் ஜெனரல் சந்திரசிறி)
17) 24.05.2009- வன்னிக்கு பொதி ஏற்றிச் சென்ற வாகனங்கள் சம்பந்தமாகவும் ''விடு தலைப்புலி''போராளிகள் எனச் சந்தேகத்தின் பேரில் தடுத்துவைக்கப்பட்டுள்ளவர்களின் பெற்றோரின் கோரிக்கை.
18) 25.05.2009- மனிதாபிமானப்பணியில் ஈடுபட்டிருந்த வைத்தியர்களை விடுதலை செய்யவும்
19) 29.05.2009- அரச உத்தியோகத்தர்களுக்கு கௌரவமளித்தல்
20) 29.05.2009- பராமரிப்பின்றி தனிமையில் வாடும் முதியோர்கள்
21) 21.06.2009- வடபகுதி மக்கள் வேண்டுவது உண்மையான வசந்தமே அன்றி முகவராட் சியல்ல
22) 05.07.2009- இடம்பெயர்ந்த மக்களின் பரிதாப நிலை

**விடுதலைப்புலிகளின் தலைவர் திரு.பிரபாகரனுக்கு எழுதிய கடிதங்கள் சிலவற்றின் தலைப்புக்களும் அவற்றின் திகதிகளும்**

01) 03.05.2006- இனப்பிரச்சினைக்கு ஓர் தீர்வு
02) 10.09.2006- நாம் எங்கே செல்கிறோம்?
03) 22.06.2007- தீர்வுக்கு ஒரே வழி
04) 25.10.2007- கொலைகளை நிறுத்திப் பேச்சுவார்த்தைக்குச் செல்லவும்
05) 18.02.2008- ஒரு மனிதாபிமான வேண்டுகோள்
06) 26.07.2008- மீண்டும் ஓர் பொன்னான வாய்ப்பு
07) 12.03.2009- எம் மக்களைக் காப்பாற்ற இறுதிச் சந்தர்ப்பம்.

**இது போன்ற ஏதாவது கோரிக்கைகளை பாராளுமன்ற பிரதிநிதிகள், எவரிடமாவது முன்வைத்தனரா? மக்களே தீர்மானியுங்கள்.**

(3079)

## தமிழர் விடுதலைக் கூட்டணி ✕

## வீ. ஆனந்தசங்கரி 1

# நல்லூர் மஹோற்சவ கால நிகழ்வுகள்

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் நல்லூர் நாவலர் மணிமண்டபத்தில் நடைபெற்றுவரும் சமயச் சொற்பொழிவுகளும், கலை நிகழ்வுகளும் நிகழ்வில் இன்று புதன்கிழமை பிற்பகல் 3.00 - 6.00 மணி வரை 'குருவாய் வருவாய் அருள்வாய் குகனே' எனும் விடயம் பற்றி ஆசிரியர், மதுரகவி காரை எம்.பி. அருளானந்தத்தின் சிறப்புச் சொற்பொழிவும் தொடர்ந்து விசேட நிகழ்வாக புஸ்பமலர் யோகநாதனின் நெறிப்படுத்தலில் இசைக் கச்சேரியும், வடலியடைப்பு இந்து இளைஞர் சங்க அறநெறி பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன.

❖ ❖ ❖

இளங்கலைஞர் மன்றத்தினால் தெல்லிப்பளை துர்க்கா தேவி தேவஸ்தானத்தின் ஆதரவுடன் நல்லூர் துர்க்காதேவி மண்டபத்தில் மாலை 6.30 - 7.30 வரை நடைபெறும் தெய்வீக இசையரங்கில் இன்று புதன்கிழமை எஸ். குமாரசாமியின் பாட்டு இடம்பெறவுள்ளது. இதில் அணி செய் கலைஞர்களாக வயலின் ஏ. ஜெயராமன், மிருதங்கம் எஸ். துரைராசா, தபோல சதா வேல்மாறன், முகர்சிங் எஸ். செந்தூரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ஓ)

# சர்வதேச முதியோர் தினத்தை முன்னிட்ட கவிதை, கட்டுரை, பேச்சுப் போட்டிகள்

(அல்வாய்)

நலன்புரி முகாமைத்துவக் குழு இளம் மாணவ சமுதாயத்தில் முதியோர் பற்றிய ஒரு விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தும் பொருட்டு மாணவர்களிடையே முதியோர்கள் சம்பந்தமான கட்டுரை, கவிதை பேச்சுப் போட்டிகளை நடாத்தி வலய ரீதியாக வெற்றி பெறும் முதல் மூன்று மாணவர்களுக்கு 2009 ஒக்டோபர் 07 ஆம் திகதி கைதடி முதியோர் இல்லத்தில் நடாத்தப்படும் முதியோர் தின விழாவில் பரிசுகள் வழங்க நலன்புரி முகாமைத்துவக் குழு தீர்மானித்துள்ளது.

இதன் பிரகாரம் இப் போட்டிகளுக்கான தலைப்புகள் வருமாறு,

**மேற்பிரிவு**

**பேச்சுப் போட்டி**

முதியோரைப் பேணுவோம், முதியோர் எம் முதுசம், முதியோருக்கு அடைக்கலம் முதியோர் இல்லங்கள்.

**கட்டுரைப் போட்டி**

முதுமையே உலகின் முதுகெலும்பு, மனித வாழ்வில் முதுமை, முதுமை என்னும் பொக்கிஷம்.

**கவிதைப் போட்டி**

இறைவன் தந்த பரிசு முதுமை, மூத்தோரே உம் சொல் வாழி, முதுமையைப் போற்றுவோம்.

**மத்திய பிரிவு**

**பேச்சுப்போட்டி**

புலம் பெயர்ந்த நாடுகளில் எம் முதியோர்கள், முதுமை என்னும் அழகு, முதியோரை ஆதரிக்கும் முதியோர் இல்லங்கள்.

**கட்டுரைப் போட்டி**

முதியோர் இல்லங்கள், முதியோர் எமது கண்கள், இளமை தரும் அனுபவங்களே முதுமை.

**கவிதைப் போட்டி**

மூத்தோர் எம் கண்கள், முதுமை என்னும் பரிசு, முதுமையை மதித்திடுவோம்.

**கீழ்ப்பிரிவு**

**பேச்சுப் போட்டி**

முதுமை என்பது சுமையல்ல சுகம், முதியோர் இல்லங்களும் இன்றைய தலைமுறையும், முதுமை எனும் குழந்தைத் தனம்.

**கட்டுரைப் போட்டி**

முதுமை உலகின் முதுகெலும்பு, மனித வாழ்வில் முதுமை, முதுமை எனும் பொக்கிஷம்.

**கவிதைப் போட்டி**

மனித வாழ்வும் முதுமையும், முதியோர் இல்லமெனும் அருற்கூடம், முதுமையே வாழி நீ ஆகும். (ஓ-19)

## பரிசளிப்பு விழா

வலிகாமம் வலயக்கல்வி அலுவலகம் நடத்தும் வலய மட்ட பாடசாலைகளின் விளையாட்டு நிகழ்வுகளுக்கான பரிசளிப்பு விழா நாளை வியாழக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு இராமநாதன் கல்லூரி பிரதான மண்டபத்தில் வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் ப. விக்னேஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இதில் பிரதம விருந்தினராக ஓய்வு பெற்ற உதவிக் கல்விப் பணிப்பாளர் வி. பாலசிங்கம் கலந்து சிறப்பிப்பதுடன் கௌரவ விருந்தினராக ஓய்வு பெற்ற உடற்கல்வி ஆசிரியர் அ. தம்பித்துரை கலந்து கொள்ளவுள்ளதுடன் ஓய்வுபெற்ற மருந்தாளர் செல்வராணி பாலசிங்கம் பரிசில்களை வழங்கி கௌரவிக்கவுள்ளார். (ஓ)

❖ ❖ ❖

புத்தூர், புத்தகலட்டி ஸ்ரீ விஷ்ணு வித்தியாலயத்தின் பரிசளிப்பு விழா நாளை வியாழக்கிழமை காலை 9.00 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் அதிபர். கு. ரவிச்சந்திரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இதில் பிரதம விருந்தினராக சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தா கலந்து சிறப்பிப்பதுடன், சிறப்பு விருந்தினராக யாழ். பல்கலைக்கழக கல்விப் பீட சிரேஷ்ட விரிவுரையாளர் த. கலாமணி, கௌரவ விருந்தினர்களாக புத்தூர் ஸ்ரீசோமாஸ்கந்தக் கல்லூரி அதிபர் இ. இராஜமகேந்திரன் யாழ். கல்வி வலய ஆசிரிய நிலைய முகாமையாளர் ஜி. இரத்தினசிங்கம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ஓ)

## வேல் பவனி விழா

(சாவகச்சேரி)

சாவகச்சேரி ஸ்ரீ பழனி ஆண்டவர் ஆலய வேல் பவனி விழா இன்று புதன்கிழமை மதியம் 12 மணிக்கு ஆலய சூழலில் நடைபெறவுள்ளது.

இவ்விழாவில் பிரதம விருந்தினராக பிரதேச செயலர் ஸ்ரீ ஸ்ரீனிவாசன் கலந்து சிறப்பிப்பதுடன் சிறப்பு விருந்தினராக யாழ். மாவட்ட இந்து கலாசார அலுவல்கள் திணைக்கள அபிவிருத்தி உதவியாளர் ச. கணபதிப்பிள்ளை ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ஓ-4-29)

## கலைச் சங்கம் நிகழ்வு

யாழ். கொக்குவில் இந்துக் கல்லூரியின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு பழைய மாணர் சங்கத்தின் ஆதரவுடன் நடைபெறும் கலைச் சங்கம நிகழ்வின் மாலை நிகழ்வுகள் இன்று புதன்கிழமை பிற்பகல் 2.30 கல்லூரி பஞ்சலிங்கம் கேட்போர் கூடத்தில் மன்ற ஆலோசகர் உதவி அதிபர் மு. வேலாயுதபிள்ளை தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி. அ. வேதநாயகம் கலந்து சிறப்பிப்பதுடன் அன்ட்றா டிஜிற்றல் இமேஜ் உரிமையாளரும் பழைய மாணவனுமான ஜெயறஜீவனும் அவரது பாரியார் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

மேலும் நிகழ்வில் நித்திலம் சஞ்சிகை அறிமுகம் கலைஞர் கௌரவிப்பு என்பனவும் இடம்பெறவுள்ளது. (ஓ-4)


HUDEC **கரித்தாஸ் - கியூடெக்** CARITAS

**சண்டிலிப்பாய், மணற்காடு பிரதேச நிரந்தர வீடமைப்புத் திட்டத்திற்கான கட்டிடப் பொருட்களுக்குரிய கூறு விலை கோரல்**

எம்மால் மேற்கொள்ளப்படவுள்ள நிரந்தர வீடுகள் அமைப்பதற்காக பின்வரும் பொருட்களான,

01. கண்டகல், சல்லி
02. கூரை மரங்கள்,
03. புதிய தட்டை ஓடுகள், முகட்டோடுகள்,
04. கதவு நிலைகள், கதவுகள்,
05. யன்னல் நிலைகள், யன்னல்கள்,

மற்றும் கட்டிடப் பொருட்கள் கொள்வனவு செய்யப்படுவதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்படுகின்றது.

இதனடிப்படையில் அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களுக்கு மேற்படி பொருட்களை வழங்கிய / வழங்குகின்ற வழங்குனர்களிடமிருந்து கூறுவிலை விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

மேற்படி பொருட்களை வழங்குவதற்கு முன்வரக்கூடிய வழங்குனர்களை இதற்கென தயாரிக்கப்பட்டுள்ள ஒப்பந்ததாரரை பதிவு செய்யும் பத்திரத்தை பூர்த்தி செய்வதன் மூலம் ஒப்பந்ததாரருக்கு கூறுவிலை பத்திரம் வழங்கப்படும். கூறுவிலை பத்திரத்தினை எமது காரியாலயத்தில் 06.08.2009 தொடக்கம் 10.08.2009 வரையான காலப்பகுதியில் பெற்றுக் கொள்ளலாம். பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்கள் யாவும் 18.08.2009இற்கு முன்னர் நேரடியாக கையளிப்பதன் மூலமோ அல்லது பதிவுத் தபாலின் மூலமாகவோ கீழ் குறிப்பிடப்படும் விலாசத்திற்கு அனுப்பி வைக்கவும்.

இவ் விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்பட்டு தகுதியான வழங்குனர்களுடன் இடம்பெறவுள்ள கூட்டத்தில் இறுதித் தீர்மானம் எடுக்கப்படும்.

இயக்குனர்
கரித்தாஸ் - கியூடெக்
14, மத்தியூஸ் வீதி,
யாழ்ப்பாணம்.

சி. 2973



ஒன்பதாம் ஆண்டு

# நினைவலைகள்

"உள்ளத்தில்
உறைந்திருக்கும்
நினைவுகளோடு...
உறவுகள் கூடி
வணங்குகின்றோம்."



அமரர்

**திரு. தம்பிப்பிள்ளை சிவஞானசுந்தரம்**

(இளைப்பாறிய பிரதி முகாமையாளர், மக்கள் வங்கி, கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்)

தோற்றம்: 26.06.1941 மறைவு: 14.08.2000

பிள்ளையார் வீதி, திருநெல்வேலி தெற்கு, திருநெல்வேலி. -குடும்பத்தினர்-

ழ்ப்பாணம்
ரைபைத் தேர்தல்
கஸ்ட் 2009

ஞாபனம் - 2009



ர்வுக்கான பங்களிப்பு

டையில் 13ஆவது திருத்தச்சட்டம் முழுமையாக
அதற்காக பங்களிப்புச் செய்தல்.

களுக்குமான சமாதான சகவாழ்வு மற்றும்
நடைமுறைச் சாத்தியமான முயற்சிகளை

என்ற உறுதியோடு எமது தனித்துவங்களை
து மக்களோடும் ஐக்கியமாக வாழ்வதை உறுதிசெய்தல்.

யகக் கட்சி (ஈ.பி.டி.பி.)

| திரக் கூட்டமைப்பு | | X |
|---|---|---|

- இருக்கைகள் வசதிகளோடு நிழற்குடைகளை அமைத்தல்.
- மாநகரத்தின் அனைத்துப் பகுதிகளிலும் நிழல் மரங்களை நடுகை செய்தல்.
- இறந்தவர்களின் உடல்களை மின்சாரத்தில் தகனம் செய்யும் வசதியை ஏற்படுத்துதல்.
- நவீன வசதிகளுடன் கூடிய கலாசார மண்டபமொன்றை அமைத்தல்.
- வெளி மாவட்டங்களிலிருந்து வருவோர் தங்கிச்செல்லுகின்ற வகையில் சகல வசதிகளுடனும் தங்குமிடங்கள் அமைத்தல்.
- புராதன மற்றும் நுண்கலைப் பொருள்களைச் சேகரித்துப் பாதுகாத்து, பராமரித்தல். அதற்காக தனியான கட்டடமொன்றை அமைத்தல்.
- சிறுவர்கள், முதியவர்கள், பராமரிப்பற்றவர்களை தங்கவைப்பதற்கான புதிய நிலையங்களை மாநகர எல்லைக்குள் அமைத்தல்.
- புகையிரத நிலையங்களை சகல வசதிகளுடன் புனரமைத்தல்.
- இடிதாங்கி எச்சரிக்கை நிலையத்தை அமைத்தல்.
- ஐந்து நட்சத்திர உல்லாச விடுதியொன்றை அமைத்தல்.

**10. விளையாட்டுத்துறையை மேம்படுத்துதல்.**
- சர்வதேச தரத்திலான விளையாட்டு மைதானமொன்றை அமைத்தல்.
- அனைத்து வகை விளையாட்டுத்துறைகளுக்கும் ஊக்கமளிக்கும் வகையில் உபகரணங்களைப் பெற்றுக்கொடுத்தல்.
- நீச்சல் தடாகத்துடன் கூடிய உள்ளக விளையாட்டு அரங்கொன்றை அமைத்தல்.
- பாரம்பரிய விளையாட்டுக்களை மேம்படுத்தல்.

**11. சமூகத்திற்காக வாழ்ந்தோரை கௌரவித்தல்.**
- அரசியல், பொதுவாழ்வு, ஆன்மீகம், தமிழ்மொழி, கல்வி ஆகியவற்றில் தலைசிறந்தவர்களுக்குச் சிலைகளை அமைத்துப் பராமரித்தல்.
- மக்களால் போற்றப்படும் முன்னோடிகளுக்கும் சிலைகள் அமைத்தல்.
- புதிய வீதிகளுக்கு இத்தகைய முன்னோடிகளின் பெயர்களைச் சூட்டிக் கௌரவித்தல்.
- கலை, கலாசார, பண்பாட்டு விழுமியங்களை ஊக்குவித்தல்.
- பாரம்பரிய கலை, கலாசாரத்தை பாதுகாத்தல்.
- புதிய கலை, கலாசார, இலக்கியச் சிந்தனைகளை ஊக்குவித்தல்.

**12. மின்சார வசதிகள்**
- பிரதான வீதிகள் உட்பட அனைத்து வீதிகளுக்கும் பாகுபாடற்ற வகையில் ஒளிவிளக்குகளை அமைத்தல்
- மாநகர மக்களுக்கு 24 மணிநேரமும் சீரான மின்சாரம் கிடைப்பதை உறுதிப்படுத்துதல்.
- ஏற்கனவே நிறுவப்பட்டு செயலிழந்த நிலையிலிருக்கும் மின் விளக்குகளை மாற்றுதல், மழைக் காலங்களில் அவற்றைப் பாதுகாப்பதற்கு ஏற்ற நடவடிக்கை எடுத்தல்.

**13. பிரதேச அபிவிருத்தி மற்றும் புனரமைப்புப் பணிகள் என்பவற்றுக்காக,**
- மாநகரசபையின் வருமானத்திலிருந்து நிதி ஒதுக்கீடு செய்தல்.
- மாகாண மற்றும் மத்திய அரசாங்கத்திடமிருந்து நிதியுதவி பெறுதல்.
- புலம்பெயர்ந்து வாழும் எமது உறவுகளிடமிருந்து நிதியுதவி பெறுதல்.
- இந்தியா மற்றும் சர்வதேச நாடுகளிடமிருந்து நிதியுதவி பெறுதல்.
- வெளிநாட்டு தூதுவராலயங்களிடமிருந்து நிதியுதவி பெறுதல்.

**14. துயர்துடைப்புப் பணிகள்**
- நலன்புரி நிலையங்களிலும், நிவாரண முகாம்களிலும் வாழ்கின்ற உறவுகளுக்கு நிவாரணப் பணிகளைத் துரிதப்படுத்துதல்.
- அவர்களின் விரைவான மீள்குடியேற்றம், புனர்வாழ்வு, புனரமைப்புப் பணிகளை விரைவுபடுத்துதல். அவற்றைச் செய்து முடித்தல்.
- அவர்களது வாழ்வியல் உரிமைகளை பாதுகாப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுத்தல்.
- சுயதொழில் வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுத்தல்.
- மாவட்டத்திற்கு வெளியிலிருந்து முதலீடு செய்ய விரும்புபவர்களை வரவேற்றல், அதனூடாக நமது இளைஞர் யுவதிகளுக்கு வேலைவாய்ப்புகளை ஏற்படுத்துதல்.

**15. பெண்களின் உரிமைகளைப் பாதுகாத்தல்.**
- கணவரை இழந்தவர்கள் மற்றும் கைவிடப்பட்ட பெண்கள் ஆகியோரின் சுயதொழில் முயற்சிகளை ஊக்குவித்தல்.
- வேலைவாய்ப்புகளில் முன்னுரிமை வழங்குதல்.
- சமூகத்தில் பாதுகாப்பும் கௌரவமும் கிடைக்கப்பெற்றவர்களாக வாழ்வதற்கு பொருளாதார வசதிகளை ஏற்படுத்துதல்.
- உளரீதியான பாதிப்புகளிலிருந்து விடுவிக்கப்படுவதற்கு விழிப்புணர்வு நடவடிக்கைகளை ஏற்படுத்துதல்.

**16. மாநகரசபையின் தொழிலாளர்களின் வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்துதல்.**
- குடியிருப்பு வசதிகளை ஏற்படுத்துதல், கூடுதல் வசதிகளைச் செய்து கொடுத்தல்.
- அவர்களின் சுகாதார நலன்களைப் பாதுகாக்கின்ற வகையில் நவீன தொழில் உபகரணங்களைப் பெற்றுக் கொடுத்தல்.
- மாநகரின் தேவைக்கேற்ற வகையில் தொழிலாளர்களை நியமித்தல்.
- பாரபட்சமற்ற வகையில் அவர்களின் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றுதல்.

**17. சகல வசதிகளுடனும் கூடிய தீயணைப்புப் படைப்பிரிவொன்றை அமைத்தல்.**
- இப்பிரிவிற்குத் தேவையான வாகன வசதிகளைப் பெற்றுக்கொடுத்தல்.
- தேவையான மற்றும் பாதுகாப்பான உபகரணங்களை பெற்றுக்கொடுத்தல்.
- தேவையான ஆளணியை நியமித்தல்.

**18. உதவித்திட்டங்கள்**
- முன்பள்ளிகள், சனசமூக நிலையங்கள், கிராம அபிவிருத்திச் சங்கங்கள், மாதர் சங்கங்கள், விளையாட்டுக் கழகங்கள் ஆகியவற்றின் முன்னேற்றத்திற்கு உதவிகளை வழங்கி ஊக்குவித்தல், புதியனவற்றை உருவாக்குதல்.
- சகல சமயங்களின் மேம்பாட்டுக்கும் உதவுதல், விழுமியங்களைப் பாதுகாத்தல்.
- யுத்தத்தால் பாதிக்கப்பட்ட, வறுமைக்கோட்டிற்குட்பட்ட சிறுவர்களின் கல்விக்காக உதவுதல், இராப் பாடசாலைகளை மீண்டும் ஏற்படுத்துதல்.

**19. பொதுநூலகப் பாதுகாப்பு**
- பொதுநூலகத்தை மேலும் அழகுபடுத்தி, வளப்படுத்துதல். அதன் புத்தகங்கள், ஆளணி, வளங்கள் என்பவற்றில் காணப்படும் குறைபாடுகளை நிவர்த்தி செய்தல். மீண்டும் தெற்காசியாவின் தலைசிறந்த நூலகமாக அதனை உருவாக்குதல்.
- அனைத்து சனசமூக நிலையங்களுக்கும் விஞ்ஞான வளர்ச்சியை கவனத்தில் கொண்டு கணினி வசதி ஏற்படுத்திக் கொடுத்தல்.

**20. மீள உபயோகித்தல்**
- பிளாஸ்ரிக் பைகளுக்குப் பதிலாக துணிப் பைகளைப் பயன்படுத்துமாறு ஊக்குவித்தல்.
- பொது இடங்களில் பிளாஸ்டிக் மற்றும் கண்ணாடிப் போத்தல்கள் போடுவதற்காக தனித்தனியே குப்பைப் பெட்டிகளை வைத்து நகரத்தைச் சுத்தமாகப் பேணுதல்.
- சாப்பாட்டுக் கடைகள் போன்றவற்றிலிருந்து எடுக்கும் கழிவு உணவுகளை சேதனப் பசளை தயாரிக்க பயன்படுத்துவது.

**21. இயல்புச் சூழலை பாதுகாத்தல்**
- மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தவும், சமூக விரோதச் செயல்களை தடுக்கவும் சிவில் பாதுகாப்பு, விழிப்புக் குழுக்களை அமைத்தல்.
- அனர்த்தங்களின்போதும், அவசர தேவைகளின்போதும் அதை மக்களுக்கு அறிவிக்கவும், உதவவும் தொண்டர் அமைப்புக்களை ஏற்படுத்துதல்.

# வன்னியில் புதைக்கப்பட்டிருக்கும் கண்ணிவெடிகளை அகற்றி முடிக்க இரு வருடங்கள் செல்லும்

## இந்திய இராணுவ நிபுணர்கள் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையில் வன்னிப் பகுதியில் இடம்பெற்ற இறுதிப் போரின் போது வன்னிப் பிரதேசம் உட்பட வடக்கு கிழக்குப் பகுதிகளில் புதைக்கப்பட்டுள்ள கண்ணிவெடிகளை அகற்றுவதற்கு இன்னும் ஓரிரு வருடங்களாவது செல்லும் என்று கண்ணிவெடி அகற்றும் பணிகளில் ஈடுபடுவதற்காக இலங்கை வந்துள்ள இந்திய இராணுவ நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

இலங்கையின் வடக்கு, கிழக்கில் கண்ணிவெடிகளை ஓரளவுக்கேனும் அகற்றி முடிப்பதற்கு இன்னமும் ஓரிரு வருடங்கள் எடுக்கும்.

அதற்குப் பின்பும் மேலும் ஒரு வருடத்துக்குப் பின்னரே மக்கள் கண்ணி வெடிகள் அகற்றப்பட்ட இடங்களில் மீளக் குடியேறலாம் என்று கூறக்கூடியதாகவே கள நிலை உள்ளது.

உலகிலேயே நிலக்கண்ணி வெடிகள் மிக அதிகளவில் புதைக்கப்பட்டிருக்கும் நாடுகளில் இலங்கையும் ஒன்றாகும்.

கடந்த 25 வருட கால யுத்தத்தின் போது வடக்கிலும், கிழக்கிலும் பரவலாகப் பல இடங்களில் நிலக்கண்ணி வெடிகள் புலிகளாலும், அரச படைகளாலும் புதைக்கப்பட்டுள்ளன.

எனவே இக்கண்ணிவெடிகளை அகற்றும் பணிகள் இலகுவானவையாக அமையாது. எங்களின் பணி மிகவும் மெதுவாக நடப்பது போல வெளியுலகத்துக்குத் தோன்றினாலும் அது யதார்த்தத்தில் உண்மையாக இராது.

ஏனெனில் நாம் மிகவும் கவனமாக நிலத்தின் ஒவ்வொரு அங்குலம் அங்குலமாகத்தான் கண்ணிவெடி அகற்றும் பணிகளை முன்னெடுப்போம் என்று அவர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்தக் கண்ணிவெடிகளை அகற்றுவதற்காக இந்தியாவிலிருந்து முன்னாள் இராணுவ வீரர்களைக் கொண்ட 80 புதிய நிபுணர்கள் குழுவொன்றும் இலங்கைக்கு வரவுள்ளதாகத் தெரிவித்துள்ள இவர்கள், ஏற்கனவே கண்ணிவெடி அகற்றும் பணிக்காக இலங்கைக்கு வந்திருக்கும் இந்திய நிபுணர்களுடன் இணைந்து இவர்கள் பணியாற்றுவார்கள் எனவும் தெரிவித்துள்ளனர்.

மேலும் இந்த 80 பேரடங்கிய புதிய குழுவிற்கு இந்தியாவின் முன்னாள் மேஜர் ஜெனரல்கள் இருவர் தலைமைப் பொறுப்பேற்றுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

(ஓ-4)

## ஏ 9 வீதியூடாக மருந்து பொருட்கள் அனுப்ப நடவடிக்கை

(கொழும்பு)

வடபகுதிக்கு ஏ 9 வீதியூடாக மருந்து பொரு ட்களை அனுப்புவதற்கு சுகாதார அமைச்சு நடவடிக்கைகளை எடுத்துள்ளது. இதன் மூலம் கடல் மார்க்கமாக பொருட்களை அனுப்பி வைக்கப்படுவதற்கு ஏற்படும் செலவீனத்தை பெருமளவு குறைக்கக்கூடியதாக இருக்கும் என மருந்துப்பொருட்கள் வெளியகப்பிரிவின் பணியாளர் வைத்தியர் சரத் வீரபண்டார தெரிவித்தார்.

பாதுகாப்புப் படையினரின் ஒத்துழைப்புடன் மருந்துப்பொருட்களை லொறிகள் மூலம் அனுப்புவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

(ஓ-4)

# தொடர்ந்து முகாம்களில் மக்களை வைத்திருப்பதின் மூலம் நன்கொடைகளைப் பெற முயற்சி

## ரணில் விக்கிரமசிங்க தெரிவிப்பு

(கொழும்பு)

அரசாங்கத்தினால் ஏற்படுத்தப்பட்ட பாரிய மோதல்கள் காரணமாக வன்னிப் பகுதியிலிருந்து இடம்பெயர்ந்து இடைத்தங்கல் முகாம்களில் தங்கியுள்ள அப்பாவிப் பொதுமக்களை காரணமாக வைத்து அரசாங்கம் வெளிநாட்டு கடன்களைப் பெற்றுக் கொள்ள முயற்சி மேற்கொண்டுள்ளதாக ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

அரசாங்கம் பொதுமக்கள் மீது பலவந்தமாக வரிகளை சுமத்த முயற்சிக்கிறது. முகாம் மக்களை வெளியேற்றாமல் தொடர்ச்சியாக முகாம்களில் தடுத்து வைப்பதன் மூலம் நன்கொடைகளை பெற்றுக் கொள்ள முடியும் என்பதற்காகவே அம்மக்கள் அடிப்படை வசதிகள் கூட ஏற்படுத்திக் கொடுக்கப்படாமல் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்கள். இதன் காரணமாக அம்மக்கள் பல்வேறு இடர்களை எதிர்நோக்கி வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அகதி முகாம் நிலைவரங்கள் பற்றி கருத்துக்களை வெளியிட்டால் அரசாங்கத்தினால் ஆபத்து ஏற்படக்கூடும் என மருத்துவர்கள் அஞ்சுகிறார்கள்.



இதனால் போதியளவு உணவு மற்றும் மருத்து வசதிகளின்றி பெருமளவான அகதி முகாம் மக்கள் உயிரிழக்கிறார்கள்.

ஆகவே யுத்தத்திற்கு பின்னரான அபிவிருத்திப் பணிகளை விடவும் அகதிகளுக்கான நிவாரணப் பணிகளை முன்னெடுப்பதே முதன்மையானதெனவும் அவர் தெரிவித்துள்ளார்.

(ஓ-6)

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

### வசம்பு/ 'பிள்ளை வளர்த்தி'

Botanical Name - Acorus calamus
Family - Araceae
Engl - Sweet falg
Sing - Wadakaha

இந்தியா பர்மாவைச் சேந்ததாகக் கருதப்படும் இச்செடி தற்பொழுது உலகின் பல பகுதிகளில் வளர்க்கப்படுகின்றது. இதற்கு நீர்ப்பாங்கான இடம் ஏற்றது. ஒரு மீற்றர் உயரமுள்ள நீர் வாழ் குறுஞ்செடியாகும். இதன் தண்டு தரையடித் தண்டாகும் ; இலைகள் வாள் போன்ற குறுஞ்செடியாகும். இதன் தண்டு தரையடித் தண்டாகும் ; இலைகள் வாள் போன்ற அமைப்பைக் கொண்டது ; கரும்பச்சை நிறமுடையன ; மலர்கள் மஞ்சள் நிறமுடையவை ; கோடை காலத்தில் தோன்றுகின்றன.

**இனவிருத்தியும், பரம்பலும்**

தரையடித்தண்டுகள் மூலம் இனவிருத்தியடையக்கூடிய இச்செடி யாழ். மாவட்டத்தில் நுணிவில் பிள்ளையார் கோவில், கரவெட்டி குளத்தின் கரை ஆகிய இடங்களில் அதிகம். பரம்பல் அடைந்து காணப்படுகின்றது.

**மருத்துவப் பயன்கள்**

இதன் நிலக்கீழ்த்தண்டை உலரவைத்து மருந்திற்கு பயன்படுதப்படுகின்றது. இதனை 'பிள்ளை வளர்த்தி' என்றும், பொதுவாக 'வசம்பு' என்றும் கூறுகின்றனர். ஒருசிலர் பெயர் சொல்லா மருந்து என்றும் கூட கூறுவர் பிள்ளையை வளர்ப்பதற்கு முதலிடம் வகிப்பது வசம்பு. இதை அநேகர் அறியாத காரணத்தால் அதைப் பற்றி நினைப்பது கூட இல்லை. ஆதிகாலத்திலிருந்தே பிள்ளைக்கு வரும் நோய்களை குணப்படுத்தும் சக்தி உண்டு என்பதை கிராம மக்கள் உணர்ந்து பயன்படுத்தி வந்துள்ளனர். வசம்பை பொதுவாக குழந்தை வியாதிகளைப் போக்கத்தான் பயன்படுத்துகின்றனர்.

இதற்கு வசம்பின் மேல் சிற்றாமணக்கெண்ணெயைத் தடவி அதைத் தணலில் சுட்டுக் கரியாக்கிய பின்னரே மருந் தாகப் பயன்படுத்துகின்றனர். 'உக்கிரம்' என்பது இதனைத்தான்.

**குழந்தைக் காய்ச்சல் குணமாக**

சுட்ட வசம்பை உரைத்து இரண்டு சுண்டைக் காயளவு எடுத்து சங்களவு வெந்நீரில் கலந்து கொடுத்து வந்தால் எந்த வகையான காய்ச்சலானாலும் குணமாகும்.

**குழந்தைகள் இருமல் குணமாக**

சுட்ட வசம்பை பட்டுப்போல தூள் செய்து அரைத் தேக்கரண்டியளவு எடுத்து அரைத் தேக்கரண்டியளவு தேனில் கலந்து ஒரு நாளைக்கு மூன்று வேளை கொடுத்து வந்தால் இருமல் குணமாகும்.



**குழந்தைகள் வயிற்றுவலி குணமாக**

ஐந்து கிராம் வசம்பு, ஐந்து கிராம் அதிமதுரம் இவற்றை அம்மியில் வைத்து அரைத்து ஒரு சட்டியில் போட்டு ஒரு டம்ளர் தண்ணீர்விட்டு அரை டம்ளராகச் சுண்டக்காய்ச்சி வடிகட்டி அதில் சங்களவு வீதம் காலை, மாலை கொடுத்து வந்தால் வயிற்றுவலி குணமாகும்.

**குழந்தைகட்கு ஏற்படும் வயிற்றோட்டம் நிற்க**

வசம்பைச் சுட்டுக் கரியாக்கி அதைத் தூள் செய்து, அரைத் தேக்கரண்டியள்வு தூளுடன் அதேயளவு தேன்கலந்து ஒரு நாளைக்கு மூன்று வேளை கொடுத்து வர வயிற்றோட்டம் நின்றுவிடும்.

**பெரியவர்கள் தொண்டைக் கம்மல் குணமாக**

ஒரு வசம்புத் துண்டை வாயில் போட்டு மென்று வர தொண்டைக் கம்மல் மாறிவிடும்.

**வயிற்றுப் பொருமல் குணமாக**

வசம்பைச் சுட்ட சாம்பல் ஒரு தேக்கரண்டியளவு, சுக்குத்தூள் ஒரு தேக்கரண்டியளவு இவைகளை ஒன்றாகக் கலந்து, சிறிதளவு சர்க்கரை அல்லது சீனி சேர்த்து எந்த நேரத்திலானாலும் கொடுத்துவர வாய்வுத் தொல்லை குணமாகும். வயிற்று உப்பிசம் அடங்கும்.

**நரம்புத் தளர்ச்சி குணமாக**

வசம்பை வெயிலில் காயவைத்து உரலில் போட்டு இடித்து சல்லடையில் சலித்து ஒரு வாயகன்ற சீசாவில் போட்டு வைத்துக் கொண்டு காலை, மாலை தேக்கரண்டியளவு வாயில் போட்டு வெந்நீர் கொடுத்து வந்தால் நரம்புத் தளர்ச்சி மாறி நரம்பு முறுக்கு ஏறும். தொடர்ந்து நான்கு நாட்கள் கொடுக்க வேண்டும்.

உடலில் விஷம் கலந்து பல கோளாறுகள் ஏற்பட்டால் ஆள்காட்டி விரல் நீளத்திலுள்ள ஒரு வசம்புத்துண்டை எடுத்து, மஞ்சளை அரைத்து அதற்கு கனமாக பற்றுப் போட்டு வெயிலில் உலர்த்தி நெருப்பில் போட்டு கரி போல சுட்டெடுத்து அம்மியில் பட்டுப்போல அரைத்து, காலை, மாலை தேக்கரண்டியளவு எடுத்து வாயில் போட்டு வெந்நீர் கொடுக்க வேண்டும். தொடர்ந்து 21 நாள் சாப்பிட இரத்தத்தில் கலந்த விஷம் முறிந்து உடல் சுகப்படும்.

**தொற்றுநோய் தாக்காமலிருக்க**

◆ஒரு சுண்டைக்காயளவு வசம்புத் துண்டை வாயில் போட்டு மென்று சுவைத்து அந்த நீரை விழுங்கிக் கொண்டேயிருந்தால் எந்த வகையான விஷக்கிருமியும் இரத்தத்தில் கலக்காது.

◆வசம்பை சுட்டுக்கரியாக்கிய பொடியை முந்திரிக் கொட்டை ஓட்டின் எண்ணெய்யுடன் கலந்து முடக்கு வாதத்திற்கு மேல் பூச்சாக பயன்படுத்தலாம்.

◆சிறிதளவு வசம்பை எடுத்து சுட்டுக் கரியாக்கி அதனுடன் நல்லெண்ணெய், தேங்காய் எண்ணெய், விளக்கெண்ணெய் ஆக மூன்று எண்ணெய்களையும் சிறிய அளவில் கலந்து குழைத்து அடிவயிற்றில் பூச வயிற்றுப் பொருமல் நீங்கும்.

**திக்குவாய் குணமாக...**

சிறிது வசம்பை எடுத்து சுத்தம் செய்து அம்மியில் வைத்துத் தட்டித் தூள் செய்து, சிறிது தூளை தேனில் குழைத்து அதிகாலையில் தினமும் உட்கொண்டு வந்தால் திக்குவாய் குணமடையும்.

**கால் ஆணி மறைய...**

மஞ்சள் 5 கிராம், வசம்பு 5 கிராம் இரண்டையும் அம்மியில் வைத்து, கைப்பிடியளவு மருதாணி இலையையும் சேர்த்து நீர்விட்டு, மைபோல அரைத்து, கால் ஆணி உள்ள இடத்தில் அடைபோலக் கனமாக வைத்து, மேலே ஒரு வெற்றிலையை வைத்துத் துணியினால் இறுகக் கட்டி விட வேண்டும். படுக்கு முன் இதைச் செய்ய வேண்டும். இதே மாதிரி தொடர்ந்து 20 நாட்கள் கட்டி வந்தால் கால் ஆணி விழுந்துவிடும். இதைக் தினமும் புதிதாக அரைத்துக் கட்ட வேண்டும்.

**நமைச்சல் சொறி நீங்க**

◆இந்துப்பு 35 கிராம், எடுத்துத் தூள் செய்து வசம்பு 9 கிராம் தூள் செய்து, இரண்டையும் கலந்து வெண்ணெய் போட்டுக் குழைத்து காலையில் உடம்பு முழுவதும் பூசி, பகலில் சீயக்காய் தேய்த்து குளித்து வந்தால் நாளடைவில் நமைச்சல், தடிப்பு சொறி, ஆகியவை நீங்கும்.

◆கடுகு எண்ணெயில் வசம்பைக் கொதிக்க வைத்து வடிகட்டி மூட்டுவலி, வீக்கத்தைக் குறைக்கப் பூசலாம்.

டாக்டர் திருமதி விவியன் சத்தியசீலன் (M.D.C.S)
சிரேஷ்டவிரிவுரையாளர், சித்த மருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம், கைதடி

◆வசம்பைக் கொதிக்க வைத்து அந்நீரால் வாய் கொப்பளித்துவர பல்வலி, ஈறுகளின் வீக்கம் குணமாகும்.

◆வறுத்த பெருங்காயத்துடன் வசம்பைச் சம அளவில் பொடியாக்கி வேளைக்கு 5 கிராம் சாப்பிட்டால் வயிற்றிலுள்ள பூச்சிகள் செத்து வெளியேறும்.

++++

ஆடம்பரத்தின் மென்மையான மெத்தையின் மீது தான் பெரும்பாலான இராச்சியங்கள் அழிந்தன.

– யுங்

வலம்புரி

## என்னருமை தமிழ் இளைஞர்களே! ஏ.ஆர்.ரஹ்மானை ஒரு கணம் பாருங்கள்

ஈழத்தமிழருக்காக தமிழகத்தில் முத்துக்குமாரன் என்ற சோதரன் தீக்குளித்து தன் உயிரை நீத்துக் கொண்டார்.

அவரைத் தொடர்ந்து தமிழகத்தில் ஈழத்தமிழருக்காக தீக்குளிக்கும் படலம் தொடர்ந்தது.

எங்களுக்காகத் தமிழகத்தில் தீக்குளித்தவர்களுக்கு எங்கள் மண்ணில் சிலை எழுப்பினாலும் தகும். இருந்தும் நாம் அவர்களை எல்லாம் மறந்து விட்டோம்.

நாலு பணம் சேர்த்து எம் ஆருயிர் சோதரா!– முத்துக்குமாரா! இது பணமல்ல, காசல்ல எங்கள் அன்பின் துளிகள் என்றெழுதி அவரின் குடும்பத்துக்கு அனுப்பியிருந்தால் நன்றி மறவா ஈழத்தமிழர் என்று தமிழகம் பேசியிருக்கும். அல்லது ஒரு இலட்சம் ஈழத்தமிழர்கள் கையொப்பம் இட்டு முத்துக்குமாரனுக்கும், ஈழத்தமிழருக்காக தீக்குளித்து எங்கள் உயிர்காக்க தங்கள் உயிரைத் தியாகம் செய்த சகோதரர்களுக்கும் அஞ்சலிகள் என்று எழுதி ஓர் அன்பு மடல் அனுப்பியிருந்தால் இனப்பற்றுள்ள ஈழத்தமிழர் என்று உலகம் புகழ்ந்திருக்கும். ஆனால் எல்லாம் மறந்தாயிற்று. தொலைபேசி இணைப்புப் பெறவும் சதொசவில் பொருள் வாங்கவுமே எங்களுக்கு நேரம் என்ற சுயநலம் எதற்கும் இடம் தரவில்லை.

இப்போது எங்கள் தமிழ் இளைஞர்கள் கையடக்கத் தொலைபேசியில் காலம் கடத்துகின்றனர்.

உலக நாட்டு ஆடைகளில் உலா வருகின்றனர். எங்கள் இனம், அதன் எதிர்காலம், முகாம்களில் அடை பட்டு அடையாளம் தெரியாமல் உடல் மெலிந்து முகம் சுருங்கி வாழ்வைத் தொலைத்து விட்டு வானத்தை வெறுத்துப் பார்க்கும் மூன்று இலட்சம் உறவுகள் இவை எதுவுமே தெரியாமல் எங்கள் இளைஞர்கள், உயர்தர வகுப்பு மாணவர்கள் செயற்படுகின்றனர்.

இவர்களுள்ளும் பொறுப்புள்ள இளைஞர்கள், அக்கறையுள்ள மாணவர்கள் உண்டென்பது மறுக்க முடியாத உண்மை.

எனினும் இந்த நேரத்தில் ஒரு இளைஞனேனும் வீதியில் நின்று வீம்பு செய்வான் ஆயின் அதுவே போதும் எங்கள் இனம் இப்படித்தான் என்பதை தீர்மானிக்க. எனதருமை தமிழ் இளைஞர்களே! ஈழத்தமிழர்களின் இன்னல் கண்டு அடைந்த வேதனையால் கடந்த இரண்டு மாதமாக இசை நிகழ்ச்சிகளில் பங்கேற்பதை தவிர்த்து வந்தேன் என ஒஸ்கார் விருது பெற்ற இசைப்புயல் ஏ.ஆர்.ரஹ்மான் கூறிய தகவல் உங்களுக்குத் தெரிந்திருக்கும்.

இரண்டு ஒஸ்கார் விருது பெற்ற ரஹ்மான் இப்படிச் சொல்ல நாங்கள் சந்தியில் நின்று விரசச் சேட்டை செய்வது எந்தளவுக்கு நியாயம் என்பதை ஒரு கணம் எண்ணிப்பாருங்கள்.

# இடம் பெயர்ந்த மக்களுக்காக தமிழக அரசு 4ஆவது கட்ட நிவாரண பொருட்கள் அனுப்ப ஏற்பாடு

(கொழும்பு)

வன்னியிலிருந்து இடம்பெயர்ந்து முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அகதிகளுக்கு தமிழ்நாடு சார்பில் இதுவரை 3 தடவை நிவாரணப் பொருட்கள் அனுப்பப்பட்டுள்ளது. தற்போது 4 ஆவது கட்டமாக 15 கோடி ரூபா நிவாரணப் பொருட்கள் அனுப்ப ஏற்பாடு நடந்து வருகிறது.

இலங்கையில் கடந்த ஏப்ரல் மே மாதம் நடந்த போர் காரணமாக சுமார் 2 1/2 இலட்சம் ஈழத்தமிழர்கள் வீடுகளை விட்டு வெளியேறி அகதிகளாக உள்ளனர்.

அவர்களுக்கு உலகின் பல்வேறு நாடுகளும் உதவிகள் செய்து வருகின்றன. இந்தியா முதல் கட்டமாக ரூ. 500 கோடி நிதி உதவி செய்துள்ளது.

தமிழ்நாடு சார்பில் இதுவரை 3 தடவை நிவாரணப் பொருட்கள் அனுப்பப்பட்டுள்ளது. தற்போது 4 ஆவது கட்டமாக 15 கோடி ரூபா நிவாரணப் பொருட்கள் அனுப்ப ஏற்பாடு நடந்து வருகிறது.

முதல் தடவை ரூ. 10 கோடி மதிப்புள்ள பொருட்களும், 2 ஆவது கட்டமாக ரூ. 6.62 கோடி மதிப்புள்ள பொருட்களும், 3 ஆவது கட்டம்ாக ரூ. 6.90 கோடி மதிப்புள்ள பொருட்களும் ஈழத்தமிழர்களுக்கு அனுப்பப்பட்டமை தற்போது 4 ஆவது கட்டமாக பாதிக்கப்பட்ட ஈழத்தமிழர்களுக்கு ரூ. 15 கோடி பெறுமதியான நிவாரணப் பொருட்கள் அனுப்பி வைக்கப்படவுள்ளன. சென்னை துறைமுகத்தில் இருந்து நாளை வியாழக்கிழமை காலை 10 மணிக்கு நிவாரணக் கப்பல் எம்.சி. ஆம்ஸ்டர்டாம் புறப்படுகிறது.

இந்த கப்பல் 8 ஆம் திகதி காலை 11 மணிக்கு கொழும்பு துறைமுகம் சென்றடையும் இந்த நிவாரணப் பொருட்களை கொழும்பில் உள்ள இந்திய தூதரகம் பெற்று ஐ.நா. சபை நிறுவனம் மூலம் தடுப்பு முகாம்களில் உள்ள ஈழத் தமிழர்களுக்க கொடுக்கப்படும். (ஓ–4)

## புரட்சிகர இயக்கங்களை ஒடுக்கும் இலங்கை, இந்திய அரசுகளின் நடவடிக்கை

## நேபாள மாவோயிஸ்ட் தலைவர் கண்டனம்

(கொழும்பு)

இந்தியாவில் மாவோயிஸ்டுகளுக்கு எதிராகவும் இலங்கையில் விடுதலைப் புலிகளுக்கு எதிராகவும் அந்நாட்டு அரசுகள் எடுத்து வரும் நடவடிக்கைகளை கண்டிப்பதாக நேபாள மாவோயிஸ்ட் கம்யூனிஸ்ட் தலைவரும், முன்னாள் பிரதமருமான பிரசந்தா தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் காத்மண்டுவில் செய்தியாளர்களிடம் பேசுகையில், இந்தியா மற்றும் இலங்கை அரசுகள் புரட்சிகர இயக்கங்களை ஒடுக்கும் வேலையில் ஈடுபட்டுள்ளன. இது கண்டனத்துக்குரியது.

இதுபோன்ற நடவடிக்கைகளை மாவோயிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி கண்டிக்கிறது. இந்த நடவடிக்கைகள் சம்பந்தப்பட்ட அரசுகளுக்கு பாதகமாகவே முடியும்.

தெற்காசிய மாவோயிஸ்ட் கட்சிகளின்கூட்டு நடவடிக்கைகளை நாங்கள் உன்னிப்பாக கவனித்து வருகிறோம். அவர்களுடன் நெருங்கிய தொடர்புகளை வலுப்படுத்தி வருகின்றோம்.

அதுபோல உலக அளவில் உள்ள ஆயுதப் போராட்டங்களையும் நாங்கள் உன்னிப்பாக கவனித்து வருகின்றோம்.

நேபாளத்துக்கு வெளியே உரிமைகளுக்காக நடைபெறும் ஆயுதப் போராட்டங்களை நாங்கள் உறுதிபட ஆதரிப்போம். மூன்று ஆண்டுகளுக்கு முன்பு நாங்கள் அமைதிப் பேச்சு வார்த்தைகளில் சேந்ததன் மூலம் ஆயுதப் போராட்டத்தை நாங்கள் கைவிட்டு விட்டதாக அர்த்தம் கொள்ளக்கூடாது.

நேபாள இராணுவத் தளபதி கதவாலை மீண்டும் அப்பதவியில் அமர்த்தியதன் மூலம் நேபாள அரசு தவறு செய்து விட்டது. அதைத் திருத்திக் கொள்ள நான்கு நாள் அவகாசம் தருகிறோம். அதற்குப் பிறகும் அதைத் திருத்தாவிட்டால் மக்கள் புரட்சி வெடிக்கும் என்றார். (ஓ–4)

## உயர் நீதி மன்றம் முன்னர் வழங்கிய தீர்ப்புகளை மாற்றியமைக்க முடியாது

## புதிய பிரதம நீதியரசர் தெரிவிப்பு

உயர் நீதிமன்றினால் முன்னர் வழங்கப்பட்ட தீர்ப்புக்களை மாற்றியமைக்க முடியாது என புதிய பிரதம நீதியரசர் அசோக டி சில்வா தெரிவித்துள்ளார். முன்னாள் பிரதம நீதியரசர் சரத் என் சில்வா வழங்கிய தீர்ப்பு ஒன்று தொடர்பில் தாக்கல் செய்யப்பட்ட மனுவொன்றை விசாரணைக்கு எடுத்து கொண்ட போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

வொட்டர்ஸ் எட்ஜ் காணி விவகாரம் தொடர்பில் உயர் நீதி மன்றத்தினால் ஏற்கனவே வழங்கப்பட்ட தீர்ப்பினை மாற்றியமைக்க முடியாது என பிரதம நீதியரசர் தெரிவித்துள்ளார்.

இந்த வழக்குடன் முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்கவிற்கு நேரடித் தொடர்பு காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. எவ்வாறெனினும் முன்னாள் பிரதம நீதியரசர் நீர்கொழும்பு காவல்துறை அதிகாரிகளுக்கு எதிராக வழங்கிய தீர்ப்பினை புதிய பிரதம நீதியரசர் மாற்றியமைத்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஓ–4)

## வணிக பீடப் பரீட்சைகள்

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக முகாமைத்துவக் கற்கைகள் வணிகபீடத்தின் முதலாம் அரையாண்டுக்கான பரீட்சைகள் பின்வரும் ஒழுங்கில் நடைபெறவுள்ளது.

இதில் நான்காம் வருட மாணவர்களுக்கு இம்மாதம் 12 ஆம் திகதியும், முதலாம் வருட மாணவர்களுக்கு 21.ஆம் திகதியும், மூன்றாம் வருட மாணவர்களுக்கு 31 ஆம் திகதியும் இரண்டாம் வருட மாணவர்களுக்கு செப்ரெம்பர் மாதம் 10 ஆம் திகதியும் நடைபெறவுள்ளதாக முகாமைத்துவக் கற்கைகள் வணிக பீட பீடாதிபதி க. தேவராஜா தெரிவித்துள்ளார். (ஓ–4)

## ஆன்மீகச் சொற்பொழிவு

(யாழ்ப்பாணம்)

நல்லூர் மேற்கு வீதியில் அமைந்துள்ள ஸ்ரீ முத்து விநாயகர் ஆலயத்தில் கானகதா வாரிதி பிரம்மஸ்ரீ சிவ.வை. நித்தியானந்தசர்மா நிகழ்த்தி வரும் 'கம்பராமாயணம்' பற்றிய தெய்வீக தொடர் இசைச் சொற்பொழிவில் இன்று மாலை 6 மணிக்கு 'ஸ்ரீ இராம அவதாரம்' பற்றி சிறந்த பக்க வாத்திய சகிதம் தொடர் இசைச் சொற்பொழிவு நிகழ்த்தவுள்ளார். (ஓ)

## புலமைப்பரிசில் முன்னோடிப்பரீட்சை

(யாழ்ப்பாணம்)

மக்கள் வங்கியின் அனுசரணையுடன் வலிகாமம் கல்வி வலயத்தினால் ஆண்டு தோறும் நடாத்தப்படும் தரம் 5 மாணவர்களுக்கான புலமைப்பரிசில் முன்னோடிப் பரீட்சை வழமைபோல் இவ்வாண்டும் இன்று புதன்கிழமை காலை 8.30 மணிக்கு 25 பரீட்சை நிலையங்களில் நடைபெறவுள்ளது.

குறித்த நிலையங்களுக்குரிய வலிகாமம் கல்வி வலயத்தைச் சேர்ந்த பாடசாலைகள் தமது மாணவர்களை உரிய பரீட்சை நிலையங்களுக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

மறுதினம் விடைத்தாள் திருத்தும் பணி மல்லாகம் மகா வித்தியாலயம், இராமநாதன் கல்லூரி, வட்டு இந்துக் கல்லூரி, மானிப்பாய் இந்துக் கல்லூரி ஆகிய நிலையங்களில் நடைபெறவுள்ளது.

குறித்த கோட்டங்களைச் சேர்ந்த தரம் 5 இல் கற்பிக்கும் ஆசிரியர்கள் அனைவரும் நாளை வியாழக்கிழமை காலை 8.30 மணிக்கு சமூகம் அளித்து விடைத்தாள் திருத்தும் பணியில் ஈடுபடுமாறு வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் ப. விக்னேஸ்வரன் கேட்டுக் கொள்கின்றார். (ஓ)

## மாணவர் சங்க புனரமைப்புக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

காரைநகர் யாழ்ரன் கல்லூரியின் பழைய மாணவர் சங்க புனரமைப்பு கூட்டம் இன்று புதன்கிழமை 9 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் கல்லூரி அதிபர் ந. பரமசிவம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இதில் புதிய நிர்வாக குழு விடயம் பற்றியும் பிற விடயம் பற்றியும் ஆராயப்படுவதால் பழைய மாணவர்களை தவறாது சமூகமளிக்குமாறு தெரிவிக்கப்படுகிறது. (ஓ)

## சுவாமி விவேகானந்தரின் எல்லாவற்றிலும் இறைவனைக் காணலாம்



நாம் செயல்புரிய வேண்டும். நூறுவருடங்களாக வாழ ஆசைப் படலாம். விரும்பினால் எல்லா உலக ஆசைகளுக்கும் நம் மனதில் இடம் கொடுக்கலாம். ஆனால் எல்லாவற்றையும் தெய்வீகமாக்கி விடுங்கள், சொர்க்கம் ஆக்கி விடுங்கள் அவ்வளவுதான். பிறருக்கு உதவி செய்து கொண்டு ஆனந்தமான நீண்டவாழ்க்கை வாழ வேண்டும் என்று நாம் ஆசைப்படலாம்.

இவ்வாறு செயல் புரிந்தபடி தான் முத்திக்கான வழியைத் தேட முடியும். இதைத்தவிர வேறு வழியே இல்லை.

உண்மையை அறிந்து கொள்ளாமல் ஒருவன் உலக போகங்களில் முட்டாள் தனமாக மூழ்கினால் அவன் வழி தவறி விட்டான். அவனால் இலட்சியத்தை அடைய முடியாது. இனி , உலகைச் சபித்துக்கொண்டு அதை விட்டுவிட்டுக் காட்டிற்குப் போய் உடலை ஒடுக்கி பட்டினியால் உடலை அணுஅணுவாகக் கொண்டு கடின சித்தமுள்ளவனாக ஆகின்றவனும் வழி தவறியவனே. இவை இரண்டும் இரண்டு துருவங்கள். இரண்டுமே தவறான நோக்குடையவை. இருவரும் வழி தவறியவர்களே. இருவருமே இலட்சியத்தை அடையமுடியாது.

# யாழ். மாநகர வாக்காளப் பெருமக்களே!

- இலங்கை அரசு விட்டுக் கொடுப்புகள் இல்லாமல் இறுமாப்புடன் நடந்து கொண்டாலும் ஆயுதப் போராட்டம் தோல்வி அடைந்தாலும்
- ஈழத்தமிழர் பிரச்சினைக்கு இறுதித் தீர்வுக்கான சர்வதேச ஆதரவு அதிகரித்து வருகின்றது.
- இந்தியாவுடனும் சர்வதேச அரசுகளுடனும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு தொடர்ச்சியான பேச்சுவார்த்தைகளை நடாத்தி வருகின்றது. அதனடிப்படையில்
- வன்னி மக்களையும் வலிகாமம் வடக்கு மக்களையும் முஸ்லிம் மக்களையும் மிக விரைவில் மீளக் குடியேற்றுதல்
- யுத்தம் முடிபுற்ற நிலையில் வடக்கு கிழக்கில் இருந்து இராணுவத்தை அகற்றல்
- அரசாங்கம் விதித்த கடல் வலயத்தடைகள், வீதித்தடைகள், அதியுயர் பாதுகாப்பு வலயத் தடைகள் ஆகியவற்றை அகற்றல்
- இராணுவம் ஆக்கிரமித்துள்ள கட்டடங்கள் ,பொது இடங்களில் இருந்து இராணுவம் வெளியேறுதல்
- விவசாயம் , கடற்றொழில் , கல்வி , சுகாதாரம், கலை, கலாசாரம் ஆகியவற்றை அபிவிருத்தி செய்தல் இத்துடன் முக்கியமாகவும், முதன்மையாகவும்-
- ஈழத் தமிழர் பிரச்சினைக்கு கௌரவமானதும், நிரந்தரமானதும், தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்ளக்கூடியதும், எம்மை நாமே ஆளக்கூடியதுமான ஓர் அரசியல் தீர்வைக் காண்பதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, பேச்சுவார்த்தைகளை நடாத்தி வருகின்றது.
- இதன் அடிப்படையில் இந்திய அரசும் , சர்வதேச அரசுகளும் மீள் குடியேற்றத்திற்கான அழுத்தங்களை அதிகரித்து வருகின்றது.
- சர்வதேச அழுத்தங்கள் இல்லாமல் இலங்கை சிங்கள அரசு தமிழ் மக்களுக்கு எவ்வித உரிமையும் தரப்போவதில்லை என்ற அடிப்படையில் இலங்கை அரசின் மேல் அழுத்தங்களை பிரயோகிக்க தமிழ்த்தேசிய கூட்டமைப்பு தொடர்ந்து செயற்பட்டு வருகின்றது.
- எனவே, நடைபெற விருக்கும் யாழ். மாநகர சபைத் தேர்தலில் வெற்றி கொள்வதன் மூலம் தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு மேலும் பலப்படுத்தப்படவேண்டும்.
- ஸ்ரீலங்கா அரசாங்கத்தின் தமிழ் இனப் படுகொலையை தமிழ் மக்கள் கண்டிக்கிறார்கள் என்பதை சர்வதேச சமூகத்திற்கு உரத்துச் சொல்ல வேண்டும்.
- தமிழர் சலுகைகளுக்கு விலை போபவர்கள் அல்ல என்பதை அரசுக்கும் அரசு ஏஜண்டுகளுக்கும் புரிய வைக்க வேண்டும்.
- ராஜபக்ஷ அரசுடனும், சர்வதேச சமூகத்துடனும் தலை நிமிர்ந்து பேச தமிழ்த்தேசியக் கூட்ட மைப்பிற்கான ஆணை வழங்கப்படவேண்டும்.
- தமிழனின் தலைநகராம் யாழ்ப்பாணத்தில் சிங்கள பௌத்த கட்சியை அதிகாரத்தில் அமர்த்த எடுக்கும் நடவடிக்கை முறியடிக்கப்படவேண்டும்

இவை எல்லாவற்றையும் நிறைவேற்ற தமிழ் மக்களின் சின்னமான வீட்டுக்கு நேரே புள்ளடியிட்டு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை வெல்ல வைக்குமாறு பணிவுடன் வேண்டுகின்றோம்.

(C/2609)

## இலங்கைத் தமிழரசுக் கட்சி
## தமிழ் தேசியக் கூட்டமைப்பு



தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு ஆதரவு தெரிவித்து நேற்று மாலை பேரணி ஒன்று மேற்கொள்ளப்பட்டது. இப் பேரணியில் கூட்ட மைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர். அதனைப் படத்தில் காணலாம்.

# ஒரு ஆசனத்தையேனும் பெற்றுக் கொள்ளாத கட்சியின் விருப்பு வாக்கு எண்ணப்படாது

## தேர்தல் திணைக்களம் அறிவிப்பு

(கொழும்பு)

தேர்தல் வாக்களிப்பின்போது ஒரு ஆசனத்தையேனும் பெற்றுக்கொள்ளாத கட்சிகள் மற்றும் சுயேட்சைக் குழுக்களின் விருப்பு வாக்குகளை எதிர்காலத்தில் எண்ணாமல் விடுவதற்கு தேர்தல்கள் திணைக்களம் தீர்மானித்துள்ளது.

இந்த புதிய நடைமுறை ஊவா மாகாண சபை, யாழ். மாநகர சபை மற்றும் வவுனியா நகரசபை ஆகிய தேர்தல்களிலிருந்து அமுல்படுத்தப்படும் என்றும் திணைக்களம் அறிவித்துள்ளது.

தேர்தல்களில் கட்சிகள் அல்லது சுயேட்சைக் குழுக்கள் பெற்ற மொத்த வாக்குகளை எண்ணியதன் பின்னர் அவற்றுக்குக் கிடைத்துள்ள ஆசனங்களின் எண்ணிக்கை நிர்ணயிக்கப்படும்.

அதற்கு பின்னரே சகல கட்சிகள் மற்றும் சுயேட்சைக்குழுக்களின் உறுப்பினர்கள் பெற்ற விருப்பு வாக்குகள் எண்ணப்படும்.

எனினும் எதிர்வரும் 8ஆம் திகதி சனிக்கிழமை நடைபெறவுள்ள மூன்று தேர்தல்களின் போது ஒரு ஆசனத்தையேனும் பெற்றுக்கொள்ளாத கட்சிகள் அல்லது சுயேட்சைக் குழுக்களின் விருப்பு வாக்குகள் எண்ணப்படமாட்டாது. இதன் மூலமாக அதற்கு செலவிடப்படுகின்ற தொகை மற்றும் நேரத்தை மீதப்படுத்தலாம்.

மொத்த வாக்குகள் எண்ணப்பட்டதன் பின்னர் ஒரு ஆசனத்தையேனும் பெற்றுக் கொள்ளாத கட்சிகள் மற்றும் சுயேட்சைக் குழுக்களில் பிரதிநிதிகள் வாக்கு எண்ணும் நிலையத்திற்குள் அனுமதிக்கப்பட மாட்டார்கள் என்றும் திணைக்களம் அறிவித்துள்ளது.

(ச-5)

## வடக்குக்கு மின்சாரம் வழங்க ஆயிரம் மில். ரூபா ஒதுக்கீடு

வடக்கில் உள்ள சகல கிராமங்களுக்கும் அடுத்த இரண்டு வருடத்துக்குள் மின்சார வசதிகளை வழங்குவதற்காக 6 ஆயிரம் மில்லியன் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக மின்சக்தி எரிசக்தி அமைச்சர் டபிள்யூ. டி.ஜே.செனவிரத்தின தெரிவித்துள்ளார்.

வடபகுதிக்கு மின்சார வசதிகளை வழங்குவதற்கான திட்டங்கள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளதோடு ஏனைய வேலைதிட்டங்களுக்கான ஏற்பாடுகளும் நடைபெற்று வருகின்றது. வடக்கின் வசந்தம் வேலைத்திட்டத்தின் கீழ் வவுனியா சுற்றுவட்டத்திலுள்ள 35 கிராமங்களுக்கு அடுத்த சில மாதங்களில் மின்சாரம் வழங்கப்படவுள்ளது. இத்திட்டத்திற்கு 100 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இவ் திட்டத்தின் கீழ் 5ஆயிரம் குடும்பங்கள் நன்மை அடையவுள்ளதுடன் அவர்கள் வாழ்வதற்கான அடிப்படைவசதிகள் கிடைத்துவிடும் எனவும் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

(ச-5)

# 41 ஆயிரம் வாக்காளர் அட்டைகள்...

மாலை நடைபெற்றது.

இம் மாநாட்டில் யாழ். உதவித்தேர்தல் ஆணையாளர் எஸ்.குகநாதன் உட்பட தேர்தல் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

அங்கு தொடர்ந்து கருத்துத் தெரிவித்த யாழ். தேர்தல் அத்தாட்சி அலுவலகர் க்.கணேஷ்,நேற்று பிற்பகல் போட்டியிடும் 4 அரசியல் கட்சிகள்,2 சுயேட்சைக் குழுக்கான அனைத்து விஷேட அறிவுறுத்தல் கூட்டம் நடத்தப்பட்டு சகல தேர்தல் விதிகளும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் இன்று நள்ளிரவு 12 மணியுடன் தேர்தல் பிரசாரப் பணிகள் யாவும் முடிபுறுத்தப்படும்.

யாழ்.மாநகர சபை தேர்தலில் யாழ்ப்பாணத்தில் 70 வாக்களிப்பு நிலையங்களும் ஒரு இடம் பெயர்ந்தோர் வாக்களிப்பு நிலையமும் அமைக்கப்பட்டுள்ளது.

அத்துடன் கொழும்பு, கம்பஹா , புத்தளம் மற்றும் அநுராதபுரம் ஆகிய மாவட்டங்களில் மொத்தம் 15 வாக்களிப்பு நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

வாக்கு என்னும் நிலையங்கள் மொத்தம் 8 அமைக்கப்பட்டுள்ளது.

இதில் சாதாரண வாக்கு கணக்கெடுப்பு நிலையம் 6 ,இடம் பெயர்ந்தோர்,தபால் மூல வாக்கு கணக்கெடுப்பு நிலையங்கள் தலா ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளன.

ஏனைய மாவட்டங்களில் தேர்தல் வாக்ளிப்பு முடிபுகள் வந்தவுடனேயே யாழ். மாநகர சபைத் தேர்தல் முடிபு அறிவிக்கப்படும்.

### கட்சி முகவர்

ஒவ்வொரு வாக்களிப்பு நிலையத்துக்கும் அரசியல் கட்சி, சுயேட்சைக்குழு சார்பாக தலா 2 வாக்களிப்பு நிலைய முகவர்கள் நியமிக்கப்படலாம் ஆனால் அவர்கள் வாக்களிப்பு நிலைய உத்தியோகர்தர்கள் உடனோ,வாக்காளர்களுடனே பேசுவதோ அல்லது வேறு நடவடிக்கைகளிலோ ஈடுபட முடியாது.

வாக்காளர்கள் வாக்களிப்பு நிலையத்தில் தேசிய அடையாள அட்டை , செல்லுபடியாகும் கடவுச்சீட்டு, சாரதி அனுமதிப் பத்திரம், இலங்கை புகையிரத சேவை கடவுச் சீட்டு , ஓய்வூதிய அடையாள அட்டை , முதியோர் அடையாள அட்டை , ஆட்பதிவுத் திணைக்களத் தால் வழங்கப்பட்ட சமய குருமார்களுக்கான அடையாள அட்டை மற்றும் உதவித் தேர்தல் ஆணையாளரால் வழங்கப்பட்ட தற்காலிக அடையாள அட்டை என்பவற்றில் ஒன்றை காண்பித்தால் மாத்திரமே வாக்குச் சீட்டு வழங்கப்படும்.

வாக்காளர் அட்டை நிச்சயம் கொண்டு வரப்பட வேண்டும் என்று இல்லை வாக்களிப்பதற்கு தகுதியானவர் எனத் தெரிந்தால் வாக்களிப்புக்குச் சென்று அடையாள அட்டையை கொடுத்து வாக்குரிமையை உறுதி செய்து வாக்களிக்க முடியும்.

வாக்களிப்பதற்கு முன் அடையாள அட்டை உறுதிப்படுத்தப்பட்ட பின்பே வாக்குச் சீட்டு வழங்கப்படும்

யாழ். மாவட்ட செயலகத்தில் உதவித் தேர்தல் ஆணையாளர் தலைமையில் தேர்தல் விஷேட இணைப்பு அலுவலகம் இயங்கும்.

இதில் பொலிஸ் அலுவலர்களும் கடமையாற்றுவர். தேர்தல் முறைப்பாடுகள் இவ் அலுவலகத்திற்கு அறிவிக்கப்பட்டால் பொலிஸாரூடாக நடவடிக்கை எடுக்கப்படும்.

வாக்களிப்பு நிலையங்களுக்கு கடமையாற்று உத்தியோகத்தர்கள், கட்சி முகவர்கள் இருவர், வாக்களிக்கும் வேட்பாளர், தேர்தல் கண்காணிப்புக் குழு,வாக்காளர்கள், ஆகியோர் அனுமதிக்கப்படுவர் வேறு எந்தத் தரப்பினரும் அனுமதிக்கப்படார்.

யாழ். மாநகர சபைத் தேர்தலுக்காக 94 ஆயிரத்து 87 வாக்காளர்கள் அட்டைகள் உள்ளன. இதில் 52 ஆயிரத்து 339 அட்டைகள் விநியோகிக்கப்பட்டதுடன் 41 ஆயிரத்து 748 அட்டைகள் விநியோகிக்கப்படாமல் பிரதம தபாலகத்திலுள்ளது.

வாக்காளர் அட்டைகள் கிடைக்காதவர்கள் பிரதம தபாலகத்திலிருந்து அடையாளப்படுத்தி பெற்றுக்கொள்ள முடியும். அத்துடன் தபால் வாக்களிப்பிற்கு 335 அனுமதிகள் வழங்கப்பட்டுள்ளது.

இதில் இதுவரை 328 வாக்குகள் தபால் மூலம் அளிக்கப்பட்டுள்ளது. ஏனைய 7 வாக்குகளும் தேர்தல் தினத்தன்று மாலை 4 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும்.

யாழ். மாநகர சபைத்தேர்தல் ஆகஸ்ட் 8ஆம் திகதி காலை 6 மணிக்கு ஆரம்பமாகும் என்றார்.

(ச-5)

# தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின்...

திட்டம் ஒன்றைதமிழ்த்தேசியகூட்டமைப்பு வடிவமைத்து வருகின்றது.

இத் தீர்வுத்திட்டம் விரைவில் இலங்கை அரசிடமும் இந்தியா உட்பட சர்வதேச சமூகத்திடமும் முன்வைக்கப்படும். இது தொடர்பாக ஏற்கனவே இந்திய வெளியுறவு அமைச்சருடன் இடம்பெற்ற சந்திப்பின் போது கலந்துரையாடப்பட்டது.

இந்தியா எம்முடன் சேர்ந்து இனப்பிரச்சினைக்கு தீர்வுகாண்பதற்கு பூரண சம்மதம் தெரிவித்துள்ளது.

இலங்கை இனப்பிரச்சினைக்கு 13 ஆவது திருத்தச்சட்டம் தீர்வு அல்ல. அரசுடன் இணைந்துள்ள பிள்ளையான், ஹிஷ்புல்லா ஆகியோர் படும்பாடு அனைவருக்கும் தெரியும்.

### கூட்டமைப்பு விலைபோகாது

இலங்கையின் அரசியல் கட்சிகளை உடைத்தும் தம்முடன் இணைந்து கொண்ட அரசுகளாலோ தற்போது உள்ள மகிந்த அரசினாலோ தமிழ்த் தேசிய கூட்டமைப்பை பிரிக்க முடியவில்லை ;பேரம் பேசவும் முடியவில்லை.

ஏனெனில் நாம் தமிழ் மக்களின் அரண்களாக இருந்து செயற்படுவர்கள். 1997இலும் சரி 2004இலும் சரி நடத்தப்பட்ட தேர்தல்களில் தமிழர்கள் தம்மைத்தாமே ஆளும் சுயநிர்ணயத்துடன் தொடர்பான கொள்கையுடன் வாக்களித்து எங்களை நாடாளுமன்றத்துக்கு தெரிவு செய்தனர்.

நாம் யாருக்கும் அடிமையாகப் போவதுமில்லை. யாருக்கும் விலை போவதுமில்லை. எம்மை எமது மக்கள் பலப்படுத்தியே வைத்துள்ளனர்.

சர்வதேச அழுத்தம் காரணமாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ 13ஆவது திருத்தச் சட்டத்தை அமுல்படுத்தப் போவதாக கூறிய வேளை ஜே.வி.பி. வெளியேறியது.

ஏனைய அரசியல் தரப்புக்கள் இரகசியமாக மகிந்த ராஜபக்ஷவை எச்சரித்துள்ளது. இதனால் ஜனாதிபதி 13ஆவது திருத்தச் சட்டத்தை குப்பைத் தொட்டிக்குள் போட்டுள்ளார்.

சிங்கள மக்களின் நலனை எதிர்பார்க்கிற இலங்கை அரசு தமிழ் மக்களின் பிரச்சினைக்கு எவ்வாறு தீர்வு வைக்கப் போகின்றது.

தமிழர்கள் சரித்திர நீதியாக வாழ்ந்து வந்த பகுதிகளில் விவசாயம், பொருளாதாரம், பாதுகாப்பு, காணிஅதிகாரம், கைத் தொழில் நடவடிக்கை, கல்வி உட்பட பல்வேறு நிர்வாகக் கட்டமைப்புகளுடன் கூடிய எமது கையில் சுயநிர்ணயத்துடன் ஆட்சியாள எமக்கு அதிகாரம் அளிக்கப்பட வேண்டும் இதற்காக சர்வதேச ரீதியாக நிதி திரட்டுவதற்கு எமக்கு அனுமதியளிக்கப்பட வேண்டும்.

இவ்வாறான அபிவி ருத்தித் திட்டங்களை சில நாடுகளுக்கு எடுத்துரைத்துள்ளோம் அந்நாடுகள் இது தொடர்பாக இலங்கை அரசை வலியுறுத்தியுள்ளன.

### பொய்ப் பிரசாரம்

மேலும் வன்னியில் இடம் பெயர்ந்த மக்கள் விடயத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அவர்களிடம் அக்கறை காட்டவில்லை என சிலர் திட்டமிட்டு பொய்ப் பிரசாரங்களை மேற்கொண்டனர்.

எமது கொள்கையுடனும் இலட்சியத்துடனும் ஆதரித்து நின்ற எமது மக்களை நாம் பார்க்காமல் இருப்போமா? இலங்கை அரசு எங்களை திட்டமிட்டு தடுத்து நிறுத்தியுள்ளது.

மக்களின் துயரங்களை நாம் சர்வதேசத்திற்கு எடுத்துக் கூறிவிடுவோம் என்பதால் எங்களை அங்கு செல்லவிடாமல் தடுத்து நிறுத்தியுள்ளது.

### தேர்தல் நாடகம்

இடம் பெயர்ந்து வாழும் 3 இலட்சம் மக்களின் நலனை கருத்தில் கொள்ளாமல் திடீரென வவுனியா நகரசபை ,யாழ்ப்பாண மாநகர சபை தேர்தல்களை நடத்தி தமிழ் மக்களை ஏமாற்ற முயல்கின்றனர்.

தமிழர்களுடைய விடுதலைப் போராட்டம் முடிபுற்றதாகவும் தமிழர்களுக்கு ஒரு பிரச்சினையும் இல்லை என சர்வதேசத்திற்கு எடுத்துக்காட்ட இவ் தேர்தலை நடத்துகின்றது.

மக்களின் துயரங்களை கண்டு கொள்ளாத அரச தரப்பு தற்போது தேர்தல் காலங்களில் கபட நாடகமாடி கண்ணீர் வடிக்கின்றார்கள்.

இதற்கெல்லாம் எமது மக்கள் அடிபணியப் போவதில்லை.

வவுனியா நகர சபை, யாழ்ப்பாண மாநகர சபை தேர்தலின் மூலம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வெற்றியை தமிழ் மக்கள், உலகிற்கு உறுதிப்படுத்துவர்.

இத் தேர்தல் முடிபுகளை சர்வதேச சமூகம் உன்னிப்பாக அவதானித்து வருகின்றது. எமக்கு சார்பாக தேர்தல் முடிபுகள் அமையும் இதனை சர்வதேச சமூகம் ஏற்றுக்கொள்ளும் என அவர் மேலும் தெரிவித்தார்.

இப் பத்திரிகையாளர் மாநாட்டில் நாடாளுமன்ற உறுப்பினர்களான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், துரைரட்ண சிங்கம், மாவை சேனாதிராஜா, சொலமன்சிறில் , பத்மினி சிதம்பரநாதன், முதன்மை வேட்பாளர் மு.றெமிடியல் மற்றும் வேட்பாளர்கள் கலந்து கொண்டனர்.

(ச-7)

பணிக்கவறுப் படிப்பகம்
மாநகர சபை, யாழ்ப்பாணம்.




நல்லூர் கந்தசுவாமி கோவில் மகோற்சவம் சிறப்புற வாழ்த்துகின்றோம்
அழகுக்கு அழகு செய்யும் தங்க வைர நகைகளைப் பெற்றுக்கொள்ள சிறந்த ஸ்தாபனம்
ஆசைப்பிள்ளை அன் சன் நகைமாடம்
இல. 10, பஸ் நிலையம், சங்கானை.
(C-2928)

## மனிதாபிமான பிரச்சினைகள்...

அல்லது மனிதாபிமான பிரச்சினைகளோ இடம்பெறவில்லை என அவர் குறிப்பிட்டுள் ளார்.

தென் ஆபிரிக்காவின் சர்வதேச அபிவிரு த்தி அமைச்சர் இப்ராஹிம் இஸ்மாயில் அண் மையில் வெளியிட்டிருந்த கருத்துக்கு பதில ளிக்கும் வகையில் அவர் இதனைத் சுட்டிக் காட்டியுள்ளார்.

இலங்கையில் மனிதாபிமான பேரவலம் நிலவுவதாக தெரிவிக்கப்பட்டுள்ள கருத்துக் கள் அடிப்படையற்றவை.

3 இலட்சம் இடம் பெயர்ந்த மக்கள் திடீ ரென அரசாங்கக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் அடைக்கலம் புகுந்த ஆரம்பகாலங்களில் சில சிக்கல்கள் நிலவிய போதும் தற்போது எந்த விதமான பிரச்சினைகளும் நிலவ வில்லை என அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் நிலமைகள் உலக நாடு களுக்கு ஓர் முன்னுதாரணமாக அமைந்துள்ளதென அவர் சுட்டிக் காட்டியுள்ளார். இடைத்தங்கல் முகாம் நிலைமைகள் நாளுக்குநாள் அபிவிருத்தி அடைந்துவருவதாக அவர் குறிப்


நல்லூர்க் கந்தன் கொடிய வினைகள் நீக்கி யாவருக்கும் நல்லருள் புரிய வேண்டுகின்றோம்.
உத்தரவாதத்துடன் தங்க நகைகளைப் பெற்றிட நாடுங்கள்
ஆசைப்பிள்ளை அன் சன் நகைமாடம்
இல. 10, பஸ் நிலையம், சங்கானை.
(C-2928)

## கூட்டணி வேட்பாளர்...

நேற்று பிற்பகல் யாழ். பல்கலைக்கழகத் திற்கு விஜயம் செய்த ஈ.பிடி.பியின் செயலா ளர் நாயகமும் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தாவை சந்தித்த ஜெயபாலன் ஜெசிந் தன் யாழ். பல்கலைக்கழக உடற் பயிற்சி விஞ் ஞான பீட்வளாக மாணவர்கள் முன்னிலை யில் தான் இத் தேர்தலில் ஈழமக்கள் ஜனநா யகக் கட்சியை ஆதரிப்பதாகவும் வெற்றி லைச் சின்னத்தில் போட்டியிடும் ஈ.பி.டி.பியை வெற்றி பெறச் செய்யுமாறும் பகிரங்க வேண்டு கோள் விடுத்துள்ளார் என ஈ.பி.டி.பி. மேலும் தெரிவித்துள்ளது. (ச-5)

## விரிவான எதிர்க்கட்சிக்...

ஜனநாயக மக்கள் முன்னணி, ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி மக்கள் பிரிவு மற்றும் புதிய சிஹல உறுமய ஆகிய கட்சிகள் இந்த ஒப்பந் தத்தில் கைச்சாத்திடவுள்ளன.

எவ்வாறெனினும் விரிவான எதிர்க்கட்சி கூட்டணி அமைப்பது குறித்த உடன்படிக்கை எந்தத் தினத்தில் கைச்சாத்திடப்படுமென உறுதி யான தகவல் வெளியாகவில்லை.

எவ்வாறெனினும் கட்சி சின்னத்தில் மாற் றம் ஏற்படுத்தப்பட்டால் கூட்டணி வைக்கப் பட மாட்டாது என தெரிவிக்கப்பட்டது. (ச-5)

## நலன்புரி முகாமிலிருந்த...

இது தொடர்பில் சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவா னந்தா தெரிவித்துள்ளதாவது;

வன்னி மோதல்கள் காரணமாக இடம் பெயர்ந்து வவுனியா, யாழ்ப்பாணம் நலன் புரி முகாம்களில் தங்க வைக்கப்பட்டவர்களில் யாழ் மாவட்டத்தைச்சேர்ந்த மூவாயிரத்திற் கும் மேற்பட்டவர்கள் இன்று அவர்களின் சொந்த இடங்களில் குடியமர்த்தப்படுகிறார் கள்.

இவ்வாறு விடுவிக்கப்படுபவர்கள் வட மராட்சி கிழக்கு தவிர்ந்த யாழ்.மாவட்டத்தில் ஏற்கனவே விடுவிக்கப்பட்டபிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் என அமைச்சர் கூறினார்.

இம்மக்கள் இன்று யாழ்.துரையப்பா விளை யாட்ரங்கில் வைத்து சமூக சேவைகள் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ்தேவானந்தா, ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் நாடாளு மன்ற உறுப்பினருமான பசில் ராஜபக்ஷவும் இணைந்து அரசாங்க அதிபர், பிரதேச செய லர்களிடம் கையளிக்கப்படுகின்றனர்.

இது தொடர்பில் யாழ். அரசாங்க அதிபர் க.கணேஷ் தெரிவிக்கையில்;

யாழ்ப்பாண நலன்புரி முகாம்களிலிருந்து ஆயிரத்துக்கும் மேற்பட்ட குடும்பங்களும் வவு னியா நலன்புரி முகாம்களிலிருந்து 52 குடும் பங்களும் அவர்களின் சொந்த இடங்களில் குடியமர்த்துவிக்கப்படுகின்றனர்.

யாழ். மாவட்ட செயலகத்தின் மூலம் வவு னியா, யாழ்ப்பாணம் நலன்புரி முகாமிலுள்ள மக்களுக்கு வழங்கப்பட்ட விண்ணப்ப படிவங் கள் மூலம் பதிவு செய்யப்பட்டவர்களே இன்று முதற் கட்டமாக அழைத்து வரப்படுகின்றனர்.

இவ்வாறு விடுதலை செய்யப்பட்வர் களின் விண்ணப்பங்கள் அவர்களின் சொந்த முகவரிகள் கிராம சேவையாளர்கள், பிரதேச செயலாளர்கள் மூலம் உறுதி செய்து என் னால் அங்கீகரிக்கப்பட்டவையாகும்.

தற்போது புதிதாக விடுவிக்கப்பட்ட வட மராட்சி கிழக்குப் பகுதியும் கண்ணி வெடிகள் அகற்றப்பட்டு அடிப்படை வசதிகள் அமைக் கப்பட்டு வருகின்றன. அப்பகுதியிலும் விரை வில் கட்டம் கட்டமாக மக்கள் குடியமர்த்தப் படு வார்கள் என்றார். (ச-5)

## தொண்டர் ஆசிரியர்கள்...

கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜெயந்த கல்வி அபிவிருத்தி மாநாட்டில் 296 தொண்டர் ஆசிரி யர்களுக்கு ஆசிரியர் உதவியாளர் நியமனம் வழங்கப்படுமென அறிவித்திருந்தார்.

எனினும் கல்வி அமைச்சருடனும் வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளருடனும் விசேடமாக கலந்துரையாடிய நான் யாழ். மாவட் டத்தில் உள்ள சகல தொண்டர் ஆசிரியர்களுக் கும்ஆசியரிய உதவியாளர்நியமனம் வழங் கப்படவேண்டுமென கேட்டுக்கொண்டேன். இதன் மூலம் கல்வி அமைச்சர் யாழ். மாவட் டத்தில் தொண்டர் ஆசிரியர்களாக கடமை யாற்றும் அனைவருக்கும் ஆசிரிய உதவி யாளர் நியமனம் வழங்க வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளருக்கு அனுமதி வழங்கியுள்ளார் என்றார். (ச-5)

## சரியான தலைமைத்துவத்தை...

பொதுக்கூட்டம் ஒன்றில் பிரதம விருந்தின ராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித் தார்.

இங்கு மேலும் கருத்து தெரிவித்த அமைச் சர் டக்ளஸ் தேவானந்தா;

யாழ். மாநகர சபை வெற்றி[illegible] எமது கட்சியின் வெற்றியோ அல்லது எமது வேட் பாளர்களின் வெற்றியோ அல்ல. அது எமது மக்களாகிய உங்களது வெற்றியாகும். நாம் இத் தேர்தலில் போட்டியிட நிறுத்தியிருக்கும் வேட்பாளர்கள் எமது மக்களாகிய உங்களது சேவகர்களே அன்றி உங்களுக்கு அந்நியப் பட்டவர்கள் அல்லர்.

யாழ். மாநகரசபைத் தேர்தலில் நாம் வெற்றி பெறுவதானது இப் பிரதேசத்தையும் இப்பிரதேச மக்களது வாழ்க்கை நிலையை யும் மேம்படுத்துவதற்காகவும் என்பதை இங்கு உணர்த்தியுள்ள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் இத் தேர்தல் முதல் இனிவரும் சகல தேர்தல்களிலும்குடா நாட்டு மக்கள் சரி யான தலைமைத்து வத்தைஇனங்கண்டு தங்களது தெரிவு க்களை மேற் கொள் வார்கள் என்ற நம் பிக்கை தனக் கிருப் பதாகவும்அதன்மூலம் யாழ். குடா நாட்டை முழு மையாக அபி விருத்திசெய்து, எமது மக்களின்வழ்க்கைத் தரத்தை மேம்படுத்தி துரிதகதியில் நல்ல தொருமுன் னேற் றத்தை காணமுடியும் என்றும் நம்பிக்கை தெரிவித்தார். (ச)

## இந்திய அரசின்...

இரு தரப்பு ஒப்பந்தமானது இலங்கை கட் டுமான மற்றும் பொறியியல் சேவை அமைச் சின் கீழ் வரும் கட்டுமானப் பயிற்சி மற்றும் அபிவிருத்திக்கான நிறுவனத்திற்கும் இந்திய அரசின் கட்டுமான தொழில்துறை அபிவி ருத்தி சபைக்கும் இடையில் கடந்த மாதம் செய்து கொள்ளப்பட்டது.

உதுறு வசந்தய திட்டம் என்ற பேரில் வட க்கு-கிழக்கு பிரதேசங்களில் இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட உள்ளதாக அதிகாரி கள் தெரிவித்தனர்.

விடுதலைப் புலிகளுடனான போரின் போது அழிவடைந்த கட்டங்கள் வீதிகள் மற் றும் உட்கட்டமைப்பு வசதிகளை புனரமைக் கும் பணிகள் ஏற்கனவே தொடங்கப்பட்டுள் ளன (ச-5)

YOUR FUTURE
ACCA
IN FINANCE AND ACCOUNTING
Jaffna Technical Institute(JTI)
இல. 45, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.
(பெருமாள் கோவிலுக்கு அருகில்)
T.P:-0718561654
E.mail :-accajaffna@gmail.com
(C-2977)

இன்று நல்லூர் முருகப்பெருமானின்
மஞ்சத் திருவிழா சிறக்க வாழ்த்துகிறோம்
நல்லூர் உற்சவகாலத்தினை முன்னிட்டு 48 வருடகாலம் யாழ் மண்ணில் மக்களின் நன் மதிப்பினைப் பெற்ற
இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் ஆயுள் கிளையின்
மாபெரும் விற்பனை மேம்படுத்தல்
27.07.2009 முதல் 25.08.2009 வரை
மேற்படி காலப்பகுதியினுள் எமது ஆயுள் காப்புறுதித் திட்டத்தில் இணையும் அனைத்து வாடிக்கையாளர்களிற்கும் உடனடியாக
மாபெரும் பரிசில்கள் உங்கள் கைகளில்
காப்புறுதி தொகைக்கேற்ப பெறுமதியான வீட்டுப் பாவனைப் பொருட்களை இலவசமாகப் பெற்றுக் கொள்ளலாம்.

இது குலுக்கலல்ல ....
சிறிய கட்டுப்பணத்தில் அதிகூடிய காப்புறுதித் தொகை
மேற்படி திட்டம் யாழ்ப்பாண ஆயுள்கிளையின்
உற்சவகால
பணிமனையில் மட்டுமே
அதிகூடிய இலாபத்தினைப் பெற்றுத்தரும் ஓய்வூதியத் திட்டம்,
புலமைப் பரிசில் மாணவர்களிற்கான முற்பணக் கொடுப்பனவுத்திட்டம்
எனப் பல திட்டங்களைக் கொண்ட எமது நிறுவனத்தில் இணைந்திடுங்கள்


'நீங்கள் எங்களால் பாதுகாக்கப்படுகின்றீர்கள்'
SRI LANKA LIFE
மேலதிக விபரங்களுக்கு
விற்பனை முகாமையாளர் - ஆயுள்
இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம்
உற்சவகாலப் பணிமனை நல்லூர், யாழ்ப்பாணம்.
(C-2976)

Piano / Violin Notes
Organ, வயலின், Guitar, புல்லாங்குழல், வீணை போன்ற இசைக் கருவிகளுக்கான 300 சினிமாப் பாடல்களின் Notes விற்பனைக்குண்டு. Organ, Guitar, புல்லாங்குழல் வகுப்புகள் தினமும் மாலை 4மணியிலிருந்து நடைபெறுகின்றன.
S.S.Rajeindran.
75.கோவில் வீதி, நல்லூர்.
T.P. :-0713055991
(C-2933)

வந்து விட்டது கையேட்டுடன் வினாப்பத்திரம்
பல எதிர்பார்க்கை வினாக்களுடன் அக்கரைப்பற்று M.ஸபான் வெளியிட்ட வர்ணப்பட அட்டை கொண்ட
தரம்:-5 புலமைப்பரிசில் வழிகாட்டி
விலை:-100.00
கிடைக்கும் இடங்கள்
1. பூபாலசிங்கம் புத்தகசாலை.
2. அன்னை புத்தகசாலை.
3. துர்க்கா புத்தகசாலை.
4. மொடேன் புத்தகசாலை.
(C-2978)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 05.08.2009இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.